ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய

02.01.2013 - மலர் 09, இதழ் 44




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசியைக் காணவில்லை!



## 'மாருதப்புரவீகவல்லி' 14



ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்

வளவர்கோன் பள்ளத்தி லுள்ள பாளையத்தில் தங்கியிருந்த உக்கிரசிங்கன் மனம் மாருதப்புரவீகவல்லியின் முடிவினைக் கேட்டதில் இருந்து மிகவும் வேதனை கொண்டிருந்தது. அவன் மாருதப்புரவீகவல்லியை எவ்வாறாயினும் திருமணம் செய்ய வேண்டும் என்ற முடிவினைக் கொண்டிருந் தான். வளவர்கோன் பள்ளத்துப் பாளையத்தில் இருந்து கதிரமலையிலுள்ள தனது அரண்மனைக்கு அவன் செல்லவில்லை. சகல அரச பரிபாலனங்களையும் அவன் அங்கிருந்தவாறே மேற்கொண்டு வந்தான். இவற்றையெல்லாம் அவன் ஒழுங்காக நிறைவேற்றி வந்தபோதும் மாருதப்புரவீக வல்லிமீதே எண்ணம் எல்லாம் நிலைத்திருந்தது. திசை உக்கிரசோழனுக்கு மடல் அனுப்பி மாருதப்புரவீகவல்லி யைத் திருமணம் செய்ய அனுமதி கேட்பதா? அவன் அதற்கு மறுத்துவிட்டால் என்ன செய்வது? வீணாகப் பகையை ஏற்படுத்திக்கொள் வதா? வேண்டாம் எதனையும் சிந்தித்து முடிவெடுப்போம் எனத் தன் மனதைத் தேற்றிக்கொண்டான்.

கோவிற்கடவையில் முருகன் ஆலயம் அமைப்பதற்கான வேலைகள் மிக மும்முரமாக நிறைவேறிக்கொண்டிருந்தது. மாருதப்புரவீகவல்லி நாள்தோறும் அங்கு சென்று வந்தாள். முருகப்பெருமான் மீது அவளுக்கு அவ்வளவு பக்தி. நாட்கள் மாதங்களாகின. மாதங்கள் மூன்று கடந்துவிட்டன. நகுலேச்சர் ஆலயத்தில் மன்னன் உக்கிரசிங்கன் தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்டதற்குப் பின்னர் அவன் பற்றிய நினைவுகள் எதுவும் அவளை மாற்றத்திற்கு உள்ளாக்கவில்லை. அவள் ஆலயக் கட்டட வேலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தாள்.

அன்றொருநாள் ஆலய வேலைகள் முடிவுறும் தறுவாயில் இருப்பதைத் தன் தந்தைக்குத் தெரிவிக்கும்படி காவலர் இருவரை மரக்கலத்தில் ஏற்றி அனுப்பிவிட்டு குமாரத்திப்பள்ளத்து அரசமாளிகைக்குச் சென்று உணவருந்திவிட்டு மஞ்சத்தில் துயிலச் சென்றாள் மாருதப்புரவீகவல்லி. இளவரசி துயில் கொள்ளச் சென்றதன்பின் தோழியரும் துயில்கொண்டனர். காவல் காத்து வரும் படை வீரர்களும் காவல்புரியும் இடத்தில் தம்மை மறந்து துயில் கொண்டார்கள்.

காலைவேளை துயில் நீங்கி எழுந்த தோழியருக்கு அதிர்ச்சி காத்திருந் தது. மாருதப்புர வீகவல்லியை மஞ்சத்தில் காணவில்லை. தம்மை எழுப்பாமல் அவள் வெளியே செல்வதில்லையே? எங்கு சென்றிருப்பாள். அவ்வாறு தனியே செல்லும் துணிவு அவளிடமில்லையே? நகுலேஸ்வரா! எங்கள் இளவரசியைக் காணவில்லை.

அவள் தந்தை அறிந்தால் எம்மைச் சும்மா விடுவாரா? ஐயோ! என் செய்வோம்!

மேலும் தோழியர்களால் செய்தி காவல் வீரர்களுக்குக் கிட்டியது. அவர்களும் செய்வதறியாது திகைத்தார்கள். முருகன் கோவில் கட்டப்பட்டுவரும் கோவிற்கடவை, நகுலமுனிவர் தவமிருக்கும் கீரிமலைப் பிரதேசம் ஆகிய இடங்களில் எல்லாம் மாருதப்புரவீகவல்லியைத் தேடித்திரிந்தார்கள். பகலெல்லாம் தேடித்திரிந்த காவலாளிகள் மிகவும் களைப்புற்று குமாரத்திப்பள்ள மாளிகைக்கு வந்தார்கள். அவர்கள் மாருதப்புரவீகவல்லியின் தோழிகளிடம் வந்து "இளவரசி மாருதப்புரவீகவல்லியை எங்கும் காணமுடியவில்லை" என உரைத்து, "மன்னர் திசை உக்கிரசோழன் இதை அறிந்து கொள்வாரானால் நாம் அனைவரும் தப்பிக்க முடியாது. இருந்தாலும் செய்தியை மன்னனுக்குச் சொல்லித்தானே ஆகவேண்டும்" என்றான் காவலன் ஒருவன்.

(தொடரும்)

விஜய் Bookvin

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ரூபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.

**மனிதனே கடலில் அமிழும்போது, மிகப்பெரிய கப்பல்கள் எவ்வாறு கடலில் மிதக்கின்றன?**

*மூ.கவீந்திரன், உடையார்கட்டு, முல்லைத்தீவு*

கப்பல் கடலில் விடப்படும்போது, அதாவது நிலைநிறுத்தப் படும்போது, கடல் நீர் அதனை மேல்நோக்கித் (மூழ்க விடாமல்) தாளுகின்றது. இதற்கு 'மேலுதைப்பு' என்று பெயர். இதன்போது, கப்பலின் நிறை கீழ்நோக்கி இழுக்கப்படுகிறது. கப்பல் நீரில் மிதக்க வேண்டும் என்றால், நிறையை (கீழ்நோக்கிய விசை) விடவும் மேலுதைப்பு (மேல்நோக்கிய விசை) அதிகரிக்க வேண்டும். மேலுதைப்பு அதிகரிக்க வேண்டும் என்றால் கப்பலின் கனவளவு அதிகமாயிருக்க வேண்டும். இதனால் தான் கப்பல்களின் நிறையை (திணிவு) விடவும் மேலுதைப்பு அதிகமாக இருக்கும்படி, பாரிய கனவளவுடன் கப்பல்கள் அமைக்கப்படுகின்றன.



மனிதனின் நிறையுடன் ஒப்பிடும்போது, கனவளவினால் ஏற்ப டும் மேலுதைப்பு குறைவு. ஆகவே, மனிதன் நீரில் தாழ்கிறான். ஒரு பாரிய பலகையின்மேல் மனிதன் ஏறினால், நீரில் பலகையின் கனவளவு அதிகரிக்கிறது. இதனால், முதலில் அமிழ்ந்த மனிதன் இப்போது பலகையின் உதவியுடன் மிதக்கின்றான். இந்த மேலு தைப்பு என்பது ஒரு பொருளின் திணிவில் தங்கியிருப்பதில்லை; கனவளவில் மட்டுமே தங்கியுள்ளது.

**'குளோனிங் முறை' என்பது யாது?**

*எஸ்.டிலோத்மன், செங்கலடி, மட்டக்களப்பு.*

எமது உருவத்தை ஒத்த, இன்னோர் உயிரை இவ்வுலகில் எவ்வாறு உருவாக்குவது? பிறக்கும்போதே 'இரட்டைப் பிள்ளைகளாகப்' பிறந்தாலேயன்றி அப்படியொரு அதிசயத்தை நிகழ்த்த முடியாது என்றுதான் அனைவரும் நினைத்து வந்தார்கள். ஆனால், விஞ்ஞா னிகள் 'அது முடியும்' என்று நிரூபித்தனர். 1997 இல் Dolly (டொலி) எனும் ஆடு இதற்கு சான்று பகர்ந்தது.

Dolly இன் தாய் ஆட்டிலிருந்து ஒரு முட்டைக் கலத்தை எடுத்து அதன் கருவை அகற்றினார்கள். பின்னர், அந்த தாய் ஆட்டின் மற்றுமொரு கலத்தின் கருவை அந்த முட்டைக் கலத்தினுள் செலுத் தினார்கள். இந்தக் 'கரு'வில்தான் ஓர் உயிர் சம்பந்தமான சகல தகவல்களும் உள்ளன. எனவே, தாய் ஆட்டின் வயிற்றில் அதைப்போலவே ஒரு கரு வளர்ந்து வெளிவந்தது. இந்த விஷேட குட்டிதான் 'Dolly'.



இதுவரை, பூனை, மாடு, மான், நாய், தவளை, குதிரை, எலி போன்ற பல விலங்குகள் குளோனிங் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இவற்றின் தோற்றம்தான் ஒன்றே தவிர, குணாதிசயங்கள் ஒரே மாதிரியாக அமையவேண்டும் என்கிற அவசியம் கிடையாது.

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# பிறந்துள்ள புத்தாண்டில் புதிதாய் மலர்வோம்




**2013** ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. புதிய பாடப்புத்தகங்களுடன் புது சீருடைகளுடன் மகிழ்ச்சியாகப் புதிய வகுப்புக்குச் செல்ல ஆயத்தமாகியிருப்பீர்கள். இந்த புத்தாண்டில் புதிய ஆடைகள் மற்றும் புத்தகங்களில் மட்டுமன்றி, மனதளவிலும் இதர செயற்பாடுகளிலும் புதிதாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். அப்போதுதான், புத்தாண்டில் புதிய வேலைத்திட்டங்கள் ஊடாக, புத்துணர்ச்சி கிடைக்கும்.

## பாடசாலைப் பருவ சவால்கள்

பாடசாலைப் பருவத்தில் நீங்கள் எதிர்கொள்ள வேண்டிய பிரதான சவாலாக கல்விச் செயற்பாடுகளில் வெற்றி காண்பதனைக் குறிப்பிட முடியும். நமக்குக் கிடைக்கும் கல்வியினைப் பொறுத்தே, எமது எதிர்கால வாழ்வும் அமையும். பொருத்தமான தொழில் ஒன்றைச் செய்வதற்கும் அன்றாட வாழ்விலும் சமூகத்திலும் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் நாம் பெற்றுக்கொள்ளும் கல்வியே உதவுகின்றது. அதனால், கல்வி கற்பதற்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

## என்னால் முடியும்!

பாடசாலையில் பலதரப்பட்ட அனுபவங்களை நீங்கள் எதிர்கொள்கின்றீர்கள். அதற்காக, பலதரப்பட்ட பாடங்களைக் கற்கின்றீர்கள்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அச்சம், தயக்கம், குழப்பம் என்பன ஏற்படுவது சாதாரண விடயமாகும். இந்த பலவீனங்களைக் களைந்துகொள்ள உங்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அதுவும் உங்கள் கைகளிலேயே, தங்கியுள்ளது. "என்னால் முடியும்", "என்னால் இந்த வேலையைச் செய்து முடிக்க முடியும்", "நான் ஏன் பயப்பட வேண்டும்?" என்ற வினாக்களை நீங்களே உங்களுக்குள்ளே வினவுவதனூடாக, உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக்கொள்ள முடியும். வாழ்க்கை சவால் மிக்கது. அதனால், "இல்லை", "முடியாது" ஆகிய இரண்டு வார்த்தைகளை மனதில் இருந்து அப்புறப்படுத்திவிட்டு வாழ்க்கையினை எதிர்கொள்ள வேண்டும்.

## பாடங்களைப் படிப்பதற்கு உரிய திட்டமிடல்

பாடசாலையில் அன்றாடம் கற்பிக்கும் விடயங்களை விளங்கிக் கொள்ளல், வீட்டுப் பாடங்களை அந்தந்த நாட்களில் செய்தல் ஆகியன முக்கியமாகும். ஆசிரியர்கள் கற்பிக்கும்போது, பாடங்களை உன்னிப்பாக அவதானித்து உள்வாங்குவதன்மூலம் அவற்றை நன்றாகக் கற்றுக்கொள்ளவும் மனதில் பதியவும் முடியும். அதுதான் இலகுவான வழிமுறையும்கூட. இவ்வாறே, பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற கஷ்டப்பட்டு முயற்சித்துப் படிக்க வேண்டும். விளையாட்டுகளுக்கு நேரத்தை ஒதுக்குவது அவசியமாயினும், பாடங்களுக்கும் குறிப்பிட்டளவு நேரத்தை ஒதுக்கிக்கொள்வது அவசியமாகும்.



## நினைவிற்கொள்வது எப்படி?

பாடசாலையில் கற்பிக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பிரத்தியேக குறிப்புப் புத்தகங்களை சுத்தமாகவும் கிரமமாகவும் அடுக்கி வைத்துக்கொள்ளுங்கள். பாடங்களைப் படிக்க இந்த நடைமுறை பெரிதும் உதவும். இந்த சுருக்கக் குறிப்புகளை தமக்குத் தேவையான முறையில் பயன்படுத்தி எழுதிக் கொள்வது அவசியமாகும். அத்துடன், படிக்கும் பாடத்தினை நன்கு விளங்கிப் படித்தல், மனதை தெளிவாக வைத்திருத்தல், தன்னைப் பற்றி திருப்தி கொள்ளல், பாடங்கள் தொடர்பான விடயங்களை நன்கு அவதானித்தல் என்பன படித்தவற்றை நினைவில் கொள்வதற்கான இலகுவழிகளாகும்.




## பரீட்சைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளுங்கள்

பரீட்சை என்பது எமது முன்னேற்றத்திற்கான வழிகாட்டி என்பதனை மனதில் கொள்வது அவசியமாகும். பரீட்சைகளை தொந்தரவான அல்லது கடினமானதாகக் கருதிக்கொள்வதனால், மனதில் சோம்பல் உணர்வும் படிக்கும் ஆர்வம் குன்றிப் போதலும் நிகழும். பரீட்சைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள இந்த எதிர்மறை எண்ணங்கள் தடையாகவே அமையும்.

கடந்த கால பரீட்சை வினாத்தாள்களை செய்துபார்த்தல், பாடசாலை மேலதிக வகுப்புகளில் வழங்கப்படும் மாதிரி வினாத்தாள்களை செய்து பார்த்தல் என்பன பரீட்சைக்கான ஆயத்த நடவடிக்கைகளாக அமையும் எனலாம். இவ்வாறு மாதிரி வினாத்தாள்களுக்கு விடையளிக்கும்போது ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியரின் உதவியுடன் கேட்டறிந்து கொள்ள முடியும்.

## வலது மூளைத் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

வலது பகுதி மூளையின் திறனை விருத்திசெய்த பிள்ளைகள் ஓவியம், நடனம், இசை, கவிதை, கட்டுரை ஆகிய விடயங்களில் ஆர்வமும் திறமையும் கொண்டவர்களாக இருப்பர். குழு விளையாட்டுகள், ஓவியம், நடனம், இசை போன்ற அழகியற்கலைகளில் ஈடுபடுவதனூடாக நீங்கள் வலது பக்க மூளையின் திறனை வளர்த்துக்கொள்ள முடியும்.

## இடது மூளைத் திறனை வளர்த்துக்கொள்ளல்

இடது மூளைத்திறன் விருத்தி கொண்ட பிள்ளைகள் கணிதம், தர்க்க சாஸ்திர ஆய்வு ஆகிய துறைகளில் அதிக வெற்றியைப் பெறுவர். கணிதப் பயிற்சிகளில் ஈடுபடுவதனூடாகவும் சதுரங்கம், செஸ் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவதனூடாகவும் இடதுபக்க மூளைத்திறனை விருத்தி செய்ய முடியும்.

பிரியா



## வாசகர் முகம்



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
**ஏ.எஸ்.சுமையா,**
ஹெட்டிபொல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க மீனின் தலைக்கனம்

ஒரு குளத்தில் ஏராளமான மீன்கள் வசித்து வந்தன. அவற்றில் ஒரு தங்க நிற மீனும், ஒரு கெளுத்தி மீனும் நண்பர்களாக இருந்தன. தங்க நிற மீன், தான் அழகாக தங்கம் போன்று மினு மினுப்பாய் இருப்பதை எண்ணிக் கர்வம் கொண்டது. கெளுத்தி மீனிடம் நட்பாக இருந்தாலும், அடிக்கடி அதன் தோற்றத்தைக்கண்டு கேலி செய்துகொண்டிருந்தது.

ஒருநாள் தங்க மீன் மிக ஆனந்தமாக நீரில் குதித்துக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தது. அப்போது அந்தப் பக்கமாக கெளுத்தி மீன் வந்தது. அதைப் பார்த்ததும் தங்க மீனுக்கு சந்தோஷம் அதிகமாகிவிட்டது. "ஏய்! இன்றும் என் அழகைப் பார். என் மினுமினுப்பைப் பார். வசீகரத்தைப் பார். நாளுக்கு நாள் என் அழகு எப்படிக் கூடிக்கொண்டே போகிறது பார்! உலகில் என் போன்ற அழகிய மீன் எங்காவது இருக்க முடியுமா? ஹூம்... இறைவன் உன்னையும்தான் படைத்திருக்கிறானே...! அவலட்சணமாய். கருமை நிறத்தில் சொரசொரப்பாய்... என்ன பிறவியோ நீ..!. இந்தக் குளத்தில் என்னைப் போல் வேறு யாரும் இல்லாததால் உன்னுடன் பழகவேண்டிய சூழ்நிலை. எல்லாம் என் தலைவிதி" என்றது.

"தங்க மீனே! எம்மையெல்லாம் படைத்தது இறைவன். உன்னை இத்தனை அழகாய் படைத்ததற்கும், என்னை இத்தனை அவலட்சணமாகப் படைத்ததற்கும் ஏதேனும் வலுவான காரணம் இருக்கும். அதனால் இறைவனுடைய செயலைக் குறை சொல்லாதே. என் தோற்றம் இப்படி இருக்கிறதே என்று எண்ணி என்றுமே நான் கவலைப்பட்டதில்லை. எனக்கு இந்த உடலமைப்பே போதும். ஆனால், ஒரு விடயம். உனக்குப் பெருமை அதிகமாகிவிட்டது. இது நல்லதல்ல; பெருமை உள்ளவர்களை கடவுள் எதிர்த்து நிற்பார். விரைவில் உனக்குப் பாடம் கிடைக்கும்!" என்று அமைதியாகச் சொன்னது.

"சரிதான்! இது உன் இயலாமையின் வெளிப்பாடு. நிச்சயம் உன்னை உனக்குப் பிடிக்கவில்லை. அதனால், பிடித்தது போல் எதையோ சொல்லிச் சமாளிக்கிறாய். சரிவிடு. சில சமயங்களில் உன்னை நினைத்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. சரி... சரி... உன்னுடன் பேசிக்கொண்டிருப்பதால் என் மகிழ்ச்சி கெடுகிறது. நான் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு துள்ளிக் குதித்துத் திரும்பி, ஆனந்தமாகப் பாட்டுப்பாடியபடி நீரின் மேற்பரப்புக்குச் சென்றது. திடீரென்று தன்னை யாரோ கௌவிப் பிடிப்பதுபோன்று உணர்ந்து திடுக்கிட்டு, நிமிர்ந்து பார்த்தது. ஒரு கொக்கின் அலகில் அது சிக்கிக்கொண்டிருந்தது.



"ஐயோ! கொக்கு!" என்று அலறியது தங்க மீன்.

"ஆமாம்! கொக்குத்தான். என் வாழ்நாளில் உன்னைப் போன்ற அழகிய மினுமினுப்பான மீனை நான் பார்த்ததே இல்லை. குளத்தின் ஆழத்திலேயே என்ன அழகாக ஜொலிக்கிறாய்; பிரமாதம்! இன்று எனக்கு நீ அற்புதமான விருந்து!" என்று கரகர குரலில் பேசியது கொக்கு.

"ஐயோ! என்னை விட்டுவிடு!" என்று சொல்லிக் கதறித் துடித்தது தங்க மீன்.

"விட்டுவிடவா? அடப் பைத்தியமே!" என்று அதைக் கொத்தித் தின்றது கொக்கு.

அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த கெளுத்தி மீன்,

"தங்க நிறத்துடன் மினுமினுப்பாய் தலைக்கனம் பிடித்துத் திரிந்தாயே. அந்த மினுமினுப்பே இன்று உன் உயிரை எடுத்துவிட்டது பார்த்தாயா? என்னுடைய அவலட்சணமான கரிய நிறம் கொக்கின் பார்வையில் இருந்து என்னை தப்பிக்க வைத்துவிட்டது" என்று சொல்லிவிட்டு, குளத்தின் ஆழத்திற்குச் சென்றது கெளுத்தி மீன்.




# காட்டுவாசிகளின் அடிமை

தொடர்கதை அத்தியாயம் 14

## விசித்திரக் குகைக்குள் தங்கச்சுவடி




கூடாரத்தினுள்ளே உரையாடிக்கொண்டிருந்த மனிதன் மனோகரைப் பார்த்ததும் திகைத்து விட்டான். அவசர அவசரமாக அந்தக் காட்டுவாசியுடன் உரையாடி முடித்துவிட்டு மெதுவாக மனோகரை நோக்கி வந்தான். மனோகர் தைரியத்துடன் நின்றுகொண்டிருந்தான். அந்த மனிதன் மனோகரிடம் வந்து "யார் நீ? ஏன் இங்கு வந்தாய்? கூடிய சீக்கிரம் இங்கிருந்து போய்விடு. இங்குள்ள ராட்சதக் காட்டுவாசிகள் உன்னைக் கண்டுவிட்டால் கொன்றுவிடுவார்கள். அவர்களது கண்ணில் சிக்கிவிடாமல் சீக்கிரம் போய்விடு" என்று இரக்கத்துடன் கூறினான்.

மனோகரும் அந்த மனிதனை ஒரு மரத்தின் பின்னால் அழைத்துப் பேச முற்படுகையில், அம்மனிதன், "இப்போது அதிகம் கதைக்க நேரம் இல்லை. உள்ளே ஒரு சிறுவனைக் கொன்று உண்பதற்காகக் கட்டி வைத்துள்ளனர். நானும் இக்காட்டுவாசிகளின் அடிமைகளில் ஒருவன் தான். என்னை அவர்கள் உண்ண முற்பட்டபொழுது, நான் அவர்களிடம் கெஞ்சி, அழுது, புலம்பி ஒருவாறு தப்பி விட்டேன். ஆனாலும், அவர்களுக்கு அடிமை வேலை செய்துகொண்டுதான் இருக்கிறேன்" என்று கூறினான்.

அப்போது மனோகர் ஆவலுடன், "என்ன வேலை?" என்று கேட்டான். அதற்கு அவன், "இந்தக் காட்டுவாசிகள் தரும் பெறுமதிமிக்க பொருட்களைக் கொண்டுபோய் விற்றுவிட்டு இவர்களுக்கு உணவு வகைகளைக் கொண்டுவந்து கொடுப்பேன். அப்படியில்லாமல், நான் இங்கிருந்து தப்பினால், எனது குடும்பத்தினரைக் கொன்றுவிடுவோம் என்று கூறியுள்ளனர். எனது குடும்பத்தினரது நலனுக்காகவே நான் இவ்வாறு வேலை செய்துகொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

இதைக் கேட்க மனோகருக்கு மிகவும் வேதனையாக இருந்தது. எனினும், மனோகர் அந்த மனிதனிடம், நடந்த அனைத்தையும் கூறி, உள்ளே கட்டிவைத்திருப்பது எனது நண்பன் என்றும் விளக்கினான். இவையனைத்தையும் கேட்ட அந்த மனிதன், இப்போது காட்டுவாசிகளுக்கு உணவு தேடிச்செல்வதாகவும் பின்னர் சந்திப்பதாகவும் கூறிச் சென்றுவிட்டான்.

இதனால், மனோகர் பாரிய சிந்தனையில் ஆழ்ந்தான். எவ்வாறாவது தனது நண்பனையும் இந்த அப்பாவி மனிதனையும் காப்பாற்ற வேண்டும் என நினைத்து அதற்கு ஒரு திட்டத்தை வகுக்க வெகுநேரம் சிந்தித்தான். அப்போது ஒரு யோசனை அவனுக்குத் தோன்றியது. "அந்தக் காட்டுவாசிகளை விரைவில் ஏமாற்றிவிடலாம். அவர்களிடம் ஒரு பொய்யைக் கூறி அந்த மனிதனைக் காப்பாற்றிவிடலாம்" என்று யோசிக்கையில், அமரனைக் கட்டி வைத்து தங்கச் சுவடியைக் கொண்டுவரச் சொன்ன அந்தக் காட்டுவாசி மனோகரைப் பார்த்துவிட்டான். (அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதலாவது பிரதமர்
# டீ.எஸ்.சேனாநாயக்க



அந்நியர்களிடமிருந்து இலங்கையை மீட்டெடுப்பதில் பெரும் பங்காற்றியவரும் தேசிய போராட்டத்தின் முன்னோடித் தலைவராகவும் நாட்டின் விவசாயத்துறையை எழுச்சி பெறச் செய்த சிரேஷ்ட தலைவராகவும் டீ.எஸ்.சேனாநாயக்க விளங்கினார்.

1884 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி ஹாபிட்டிகம் கோறளை, போதலே கிராமத்தில் டீ.எஸ்.சேனாநாயக்க பிறந்தார். நிலவுடமையாளராகவும் பெருந்தோட்டத்துறை அதிபதியாகவும் பிரபல அகழ்வுப்பணி வர்த்தகராகவும் திகழ்ந்த தொன் ஸ்பாட்டர் சேனாநாயக்க இவரது தந்தையாராவார். கெத்தரின் எலிசபெத் பெரேரா குணசேகர இவரது தாயாராவார்.

## குடும்ப வாழ்க்கை

மூன்று சகோதரர்களைக்கொண்ட குடும்பத்தில் கடைக்குட்டியாக டீ.எஸ்.சேனாநாயக்க விளங்கினார். இவர்கள் மூவரும் கல்கிசை சென் தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்றனர். பாடசாலைக் காலம் முதலே கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ், போலோ, பொக்சிங் மற்றும் மல்யுத்தம் என்பனவற்றில் முத்திரை பதித்த விளையாட்டு வீரராக இவர் திகழ்ந்தார். மெய்வல்லுனர் போட்டிகளிலும் குதிரையில் சவாரி செல்வதிலும் ஆர்வம் காட்டினார்.

கல்லூரியில் கல்வி பயிலும்போதே, அங்கிருந்து விலகி நில அளவை திணைக்களத்தின் லிகிதர் பணியில் அவர் சேர்ந்துகொண்டார். எனினும், குறுகிய காலத்திற்கு மட்டுமே அவரால் அந்தப் பணியினை மேற்கொள்ள முடிந்தது. பின்பு தந்தையின் தோட்டங்கள், காணிகள் என்பனவற்றை நிர்வகிக்கும் வணிகரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபட்டார். தமது 26 ஆவது வயதில் மலைநாட்டு துனுவில சந்ததியினைச் சேர்ந்த மொலி துனுவில என்ற பெண்மணியுடன் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு புதல்வர்கள் உள்ளனர்.



வெளிநாட்டு தலைவர்களுடன் டீ.எஸ்.சேனாநாயக்க

பிற்காலத்தில் பிரதமர் பதவிக்கு வந்த டட்லி சேனாநாயக்க, ரொபட் சேனாநாயக்க ஆகியோரே அவர்கள் இருவருமாவர். இவர் 1952 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி காலிமுகத்திடலில் குதிரையில் சவாரி செய்துகொண்டிருக்கும் போது தவறி விழுந்து உலக வாழ்வை நீத்தார்.

## சுதந்திரத்தை நோக்கி..

டீ.எஸ்.சேனாநாயக்க உட்பட, தேசிய தலைவர்கள் பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை விடுவிப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பினைப் பெற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். பின்தங்கிய தூரப்பிரதேசங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டு உரைகளை நிகழ்த்திய டீ.எஸ்.சேனாநாயக்க, மக்களின் பேராதரவினைப் பெற்றுக் கொண்டார்.1931 இல் அமுலான டொனமூர் அரசியல் அமைப்பின் கீழான அரச சபைக்கு மினுவாங்கொட ஆசனத்திலிருந்து டீ.எஸ்.சேனாநாயக்கா ஏகமனதாகத் தெரிவாகி, விவசாயம் தொடர்பான நிறைவேற்று சபைக் குழுவின் தலைமைப் பதவியை ஏற்று, விவசாயத்துறை அமைச்சராகப் பதவி ஏற்றார். பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இருந்த காணிச் சட்டத்தினை மாற்றியமைத்து, புதிய காணி அபிவிருத்திச் சட்டம் ஒன்றினை நிறைவேற்றினார். இதனால், விவசாயத்துறையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இவர் நீர்ப்பாசனத்துறையில் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவிலான மாற்றங்களை நிகழ்த்தினார்.

## முதலாவது பிரதமர்

எமது நாட்டில் 1931 இல் அமுலான 'டொனமூர்' அரசியலமைப்பு அரைகுறை அதிகாரங்களை வழங்கிய அரசியலமைப்பாகவே இருந்தது. எமது நாட்டின் தேசிய தலைவர்கள் எதிர்பார்த்த அரசியல் உரிமைகள் அந்த அரசியலமைப்பில் கிடைக்கவே இல்லை. மேலும் தொடரப்பட்ட போராட்டங்களின் பிரதிபலனாக 1944 இல் சோல்பரி ஆணைக்குழுவினை பிரித்தானியா இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அந்த சோல்பரி அரசியல் அமைப்பின்கீழ் 1947 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றியடைந்த டீ.எஸ்.சேனாநாயக்க அவர்கள், இலங்கையின் முதலாவது பிரதமரானார். இதன்பின்னர், 1947 டிசம்பர் 10 ஆம் திகதி இலங்கை சுயாதீன நாடாகியது. 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. முதலாவது நாடாளுமன்றம் 1948 பெப்ரவரி 10 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. -வசந்தினி



டீ.எஸ்.சேனாநாயக்க, மகன் டட்லி சேனாநாயக்கவுடன்

## 'விஜய்' தரும் சைக்கிள் பரிசு!



**நீங்கள் செய்ய வேண்டியது:**

இங்கு கேட்கப்படுகின்ற கேள்விக்கான விடை இந்த வாரம் 'விஜய்' பத்திரிகையில் இடம்பெற்றுள்ள ஏதோ ஓர் ஆக்கத்தினுள் பொதிந்துள்ளது. அந்த விடையைக் கண்டுபிடித்து உடனடியாக எமக்கு தபாலிடுங்கள் (நேரடியாக ஒப்படைப்பதைத் தவிர்க்கவும்).

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுபவருக்கு சைக்கிளொன்று பரிசாக வழங்கப்படும்.

**இந்த வாரக் கேள்வி 09**

மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் எத்தனை ஆண்டுகள் தொழில் புரிந்தார்?

கீழ்க்காணப்படும் கூப்பனில் சரியான விடையை எழுதி தபாலட்டையில் ஒட்டி 11.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முகவரிக்கு தபாலிடுங்கள்.

கேள்வி இல : 09
விடை : ................................
பெயர் : ................................
வயது : ................................
முகவரி : ................................
மாவட்டம் : ................................
தொ.பே.இல : ................................

அனுப்ப வேண்டிய முகவரி; சைக்கிள் பரிசு (09) 'விஜய்' த.பெ.எண்: 2037 கொழும்பு

**சைக்கிள் வெற்றியாளர் போட்டி இல: 05**


கே.கிருஷாந்,
41/6, இருதயபுரம் கிழக்கு,
மட்டக்களப்பு

வாரந்தோறும் சைக்கிள்களை வெல்வதற்கான வாய்ப்பு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவரை வெண்மையாக்கும் 'சுண்ணாம்பு' தயாராகும் விதம்



சுகந்தனின் தந்தையும் அண்ணாவும் வீட்டுச் சுவற்றில் 'சுண்ணாம்பு' பூசிக்கொண்டிருந்தனர். அவ்விடத்திற்கு வந்த சுகந்தன், சுண்ணாம்பு கலக்கப்பட்ட வாளியினுள் குச்சி ஒன்றை விட்டுக் கலக்கிக்கொண்டிருந்தான்.

"ஆஹா மகனே! கண்களுக்குள் சுண்ணாம்பு பட்டுவிடும். கவனம்!" என்று தந்தையார் எச்சரித்தார்.

"இந்த சுண்ணாம்பு எப்படி தயாராகின்றது அப்பா?" என்று சுகந்தன் தனது தந்தையிடம் கேட்டான்.

"எனது மேசையில் சுண்ணாம்பு உற்பத்தி தொடர்பில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்று இருக்கும் தம்பி. அதை வாசித்துப் பாருங்கள். அதில் விபரங்கள் உள்ளன" என்று அவனது அண்ணன் கூறினார்.

"சுகந்தன் ஓடிச்சென்று அண்ணாவின் மேசையின் மீதிருந்த 'எமது நாட்டின் சுண்ணாம்பு உற்பத்தி' என்ற கட்டுரையை வாசித்தான். அந்த கட்டுரையில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருந்தன.

## சுண்ணாம்பு இவ்வாறுதான் உற்பத்தியாகின்றது

கல்சியம் காபனேட் உள்ளடங்கிய சுண்ணாம்புக் கற்களை எரிப்பதனூடாகவே, சுண்ணாம்பு எனப்படும் கல்சியம் ஒக்சைட் கிடைக்கின்றது. சுண்ணாம்புக் கற்களைத் தவிர, பவளப்பாறைகள், வில்வம் ஓடு என்பனவும் சுண்ணாம்பு உற்பத்தியின்போது பயன்படுத்தப்படுகின்றன. விசேடமாக, வடிவமைக்கப்பட்ட வெதுப்பியிலேயே, சுண்ணாம்புக் கற்கள் எரியூட்டப்படுகின்றன. சுண்ணாம்புக் கல் எரியூட்டப்படும்போது, சுண்ணாம்புக் கற்களில் இருந்து காபன் டையொக்சைட் வாயு வெளியேறி, கல்சியம் ஒக்சைட்டாக மாறுகின்றது.

## சுண்ணாம்பு வெதுப்பி

பொதுவாகவே, சுண்ணாம்பு வெதுப்பி 6 அடி உயரம் கொண்டது. இதன் ஆழ்பகுதியின் சுற்றளவு 6 அடியாகும்.வெதுப்பியின் மேல்பகுதியின் சுற்றளவு ஆழ்பகுதி சுற்றளவை விடச் சற்றுக் குறைவானதாகும். செங்கற்களைக் கொண்டே இந்த வெதுப்பி அமைக்கப்பட்டிருக்கும். வெதுப்பியின் வெளிப்புறத் தோற்றம் உருளை வடிவினதாக இருக்கும். வெதுப்பியின் கீழ்ப்பகுதியில் எரியூட்டவும் எரிக்கப்பட்ட சுண்ணாம்பினை வெளியே எடுக்கவும் என திறந்த பகுதிகள் (யன்னல்) அமைக்கப் பட்டிருக் கும்.



சுண்ணாம்பு வெதுப்பி

சாதாரண சுண்ணாம்பு, சுத்தமான சுண்ணாம்பு என இரண்டு வழிகளில் சுண்ணாம்பு பெறப்படுகின்றது.

## சாதாரண சுண்ணாம்பைப் பெறும் வழிமுறைகள்

இதன்போது வெதுப்பிக்குள் 18 அங்குலம் கொண்ட சுண்ணாம்புக்கல் தட்டு வைக்கப்படுகின்றது. அதன் மேல் 9 அங்குலம் கொண்ட விறகுத் தட்டு வைக்கப்படும். வெதுப்பி நிரம்பும் வரை இவ்வாறு விறகுத் தட்டும் சுண்ணாம்புக்கல் தட்டும் மாறி மாறி அடுக்கப்படும். அதன்பின்னர் யன்னல்களி னூடாகத் தீ செலுத்தப்பட்டு எரியூட்டப்படும். சிறிது நேரத்தில் வெதுப்பி முழுவதும் தீ பரவும். 10 மணித்தியாலங் களின் பின்னர் வெதுப்பியினுள் இருக்கும் எரிந்த எச்ச மிகுதிகள் படிப்படியாக கீழே படியத் தொடங்கும். வெதுப்பி நன்கு குளிர்ச்சியடைந்ததும் அங்கு எஞ்சியிருப்பவை கீழே உள்ள யன்னல் வழியே வெளியேற்றப்படும். இந்த முறையில் சாம்பலாக உள்ள சுண்ணாம்பில் விறகுகளின் சாம்பல் கலந்து விடுவதனால், சுத்தமான சுண்ணாம்பு இதன்மூலம் பெறப்படுவ தில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தும்





சுண்ணாம்புத் தூள்



சுண்ணாம்புக்கல்

## சுத்தமான சுண்ணாம்பைப் பெறுதல்

இந்த முறையின்கீழ், வெதுப்பி நிரம்பும்வரை சுண்ணாம்புக் கற்கள் இட்டு வெதுப்பியின் அடிப்பாகத்தில் தீ மூட்டப்படுகின்றது. சூடான காற்று அந்த சுண்ணாம்புக் கற்களுக்குக் கிடைப்பதனால், வெதுப்பியின் உச்சியில் உள்ள புகைபோக்கியிலிருந்து காபன் டையொக்சைட் வாயு வெளியேறுகின்றது. இந்த முறையில் வெதுப்பி முழுவதும் குளிர்விக்கப்பட்டு சுண்ணாம்பு பெறப்படுகின்றது. சுத்தமான சுண்ணாம்பினை இந்த வழிமுறையினூடாகப் பெற முடியும்.

## நீர் இடல்

கல்சியம் ஒக்சைட் எனப்படும் சுடப்பட்ட சுண்ணாம்பு சீமெந்துத் தரையில் இடப்பட்டு நீர் ஊற்றப்படுகின்றது. அல்லது நீரினால் நனைக்கப்பட்ட சாக்குகள் சுண்ணாம்பின்மீது இடப்படுகின்றன. இதன்போது எரியூட்டப்பட்ட சுண்ணாம்பு 'சு... சு... சு' என்ற சத்தத்துடன் வெப்பத்தினை வெளியேற்றிய வாறு நீரை உறிஞ்சிக்கொண்டு மென்மையான தூளாகிவிடுகின்றது. இதன்போது, எரிந்த சுண்ணாம்பு ரசாயன முறையிலும் பௌதிக முறையிலும் பாதிப்பினை எதிர்கொள்கின்றது. கல்சியம் ஒக்சைட்டானது, நீரை உறிஞ்சி கல்சியம் ஹைட்ரொக்சைட் அதாவது நீரிடப்பட்ட சுண்ணாம்பாக மாறுகின்றது.

## சிறந்த சுண்ணாம்பின் தன்மைகள்

* சுண்ணாம்பு சுத்தமாக இருப்பதுடன், அதில் களிமண் அளவு 5 சதவீதத்தை விட குறைவாக இருக்கும்.
* நீரிடும் போது இலகு தன்மையுடன் இருக்கும்.

## சுண்ணாம்பினால் பெறப்படும் நன்மைகள்

* சுவர் எழுப்பும்போது பயன்படல்.
* சுவரை மெழுகுவதற்கு உதவுதல்.
* சுவருக்கு நிறப்பூச்சாக (பெயின்ட்) பயன்படல்.
* சீமெந்து உற்பத்தியில் மூலப்பொருளாகப் பயன்படல்.

## சுண்ணாம்புக் கற்கள் காணப்படும் பகுதிகள்

இலங்கையின் புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணக் குடா வரையான பகுதிகளில், மயோசின் காலப்பகுதியை சேர்ந்த சுண்ணாம்புக் கற்பாறைகளைக் காண முடியும். அதே போன்று பதுளை, வெலிமடை, கண்டி, நாலந்தா, பலாங்கொட ஆகிய பகுதிகளிலும் அமைந்துள்ள கனிமவளமான டொலமைட் மற்றும் கிழக்கு கடற்பகுதிகளில் உள்ள கீழ்பாறைகளிலும் சுண்ணாம்புக் கற்கள் காணப்படுகின்றன.

## இயற்கை வளம்


கடலரிப்பைத் தடுப்பதற்கு சுண்ணாம்புக் கற்கள் உதவுகின்றன. எனினும், சட்டவிரோதமாக சுண்ணாம்புக் கற்கள் உடைக்கப்படுவதனால், கடலரிப்பு அதிகரித்துள்ளது. எனவே, தேசிய மற்றும் இயற்கை வளமாகக் கருதப்படுகின்ற சுண்ணாம்புக்கல் வளத்தைப் பாதுகாப்பது நம் அனைவரதும் கடமையாகும்.



பவளப்பாறைகள்




வெதுப்பியில் சுண்ணாம்புக்கல் இடப்பட்டுள்ள விதம்



நீரிடப்பட்ட சுண்ணாம்பு



சுண்ணாம்பு வெதுப்பியின் ஆழ்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் - II

01) சமமான 6 குவியல்களில் 570 தேங்காய்கள் உள்ளன. எனின், ஒரு குவியலிலுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................

02) 

இவ்வரைபடத்தின் நடுவில் மறுபக்கம் உள்ள எண்கள் எவை?

..............................................................................

03) 

உருவிலுள்ள பென்சிலின் நீளம் யாது?

..............................................................................

04) 500g பருப்பை வாங்கக் கடைக்காரரிடம் ரூபா 50.00 கொடுக்க, கடைக்காரர் மிகுதியாக ரூபா 22.00யைக் கொடுத்தார். எனின், 1kg பருப்பின் விலை யாது?


..............................................................................

05) ஒரு போத்தல் கொள்ளக்கூடிய திரவத்தின் அளவு 2500ml. ஏற்கனவே அதில் உள்ள திரவத்தின் அளவு 1150ml. எனின், மேலும் ஊற்றக்கூடிய திரவத்தின் அளவு யாது?

..............................................................................

06) ஐயாயிரத்து நூற்று ஐம்பதை இரண்டாயிரத்துப் பத்துடன் கூட்டினால் வரும் எண்ணை இலக்கத்தில் தருக.

..............................................................................

07) 
5cm

இச்சமபக்க முக்கோணியின் சுற்றளவு யாது?

..............................................................................

08) 2000m + [ m ] + 50m = 2212m வெற்றுக்கூட்டுக்குள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

..............................................................................

09) 250cm நீளமுள்ள கம்பியில் 25cm நீளமுள்ள சிறிய துண்டுகள் எத்தனை வெட்டலாம்.

..............................................................................

10) சாதாரண பின்னத்தில் தருக.

i. 0.06........................ ii. 0.7..........................

11) நாவலர் கல்லூரி தரம் 1 - 5 மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு ஒவ்வொரு தரத்திலும் 4 பிரிவுகள் உள்ளன (A - D வரை).

| தரம் | பிரிவுகளின் எண்ணிக்கை | மொத்த மாணவர்கள் |
|---|---|---|
| 1 | 4 | 150 |
| 2 | 4 | 161 |
| 3 | 4 | 145 |
| 4 | 4 | 160 |
| 5 | 4 | 150 |

1) தரம் 1 முதல் தரம் 5 வரையிலான மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................

2) சமமான மாணவர் தொகை காணப்படும் வகுப்பு எது?

..............................................................................

3) ஒரு மாணவருக்கு 6 புத்தகங்கள் வீதம் தரம் - 4 வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்க எத்தனை புத்தகங்கள் தேவை?


..............................................................................

4) தரம் 1, 5 மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................................

5) தரம் 1 மாணவர்களைவிட, தரம் 2 இல் எத்தனை மாணவர்கள் கூடுதலாக உள்ளனர்?




12) 

1) இவ்வுருவின் தளவடிவம் யாது?.............................

2) நிறம் தீட்டப்பட்ட பகுதி என்ன பின்னம்?.............................

3) நிறம் தீட்டப்படாத பகுதி என்ன பின்னம்?

.............................

4) இத்தளவடிவிற்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உள்ளன?

.............................

5) இவ்வடிவத்தைக்கொண்ட பொருட்கள் 2 தருக.

.............................

13)

| விலைப்பட்டியல் | |
|---|---|
| 1kg அரிசி | ரூ.40.00 |
| 500g சீனி | ரூ.25.00 |
| 250g பருப்பு | ரூ.18.00 |

1) 1kg அரிசியும் 1kg சீனியும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

..............................................................................

2) 1kg பருப்பின் விலை யாது?

..............................................................................

3) 3kg அரிசி வாங்க எவ்வளவு பணம் தேவை?

..............................................................................

4) விலைப்பட்டியலிலுள்ள பொருட்களை மட்டும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

..............................................................................

5) விலைப்பட்டியலிலுள்ள பொருட்களை வாங்கி வியாபாரியிடம் ரூ.100.00 கொடுத்தால் மீதிப் பணம் எவ்வளவு?

..............................................................................

## கணிதம் - II விடைகள்

01. 96

02. 9, 10, 11, 12

03. 4cm

04. ரூபா 56.00

05. 1100ml

06. 7160

07. 15cm

08. 162m

09. 10 துண்டுகள்

10. (i) $\frac{6}{100}$ (ii) $\frac{7}{10}$

11. 1. 766
 2. தரம் 4
 3. 960 புத்தகங்கள்
 4. 300 மாணவர்கள்
 5. 11 மாணவர்கள்

12. 1. வட்டம்
 2. $\frac{3}{8}$
 3. $\frac{5}{8}$
 4. எண்ணற்ற/முடிவிலி
 5. காப்பு/மோதிரம்/இடியப்பத்தட்டு/நாணயம்

13. 1. ரூபா 90.00
 2. ரூபா 72.00
 3. ரூபா 120.00
 4. ரூபா 83.00
 5. ரூபா 17.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினமும் கல்வியும்

சினம் என்பது சிறு எரிச்சல் முதல் பெருங்கோபம் வரையுள்ள மனவெழுச்சிகளைக் குறிப்பதாகும். ஒருவரது செய்கைகள் தடுக்கப்பட்டால், அவர் சினம் கொள்வது இயற்கை. அதில் தடுக்கப்பட்டவர் தோல்வி மனப்பான்மையுள்ளவராக இருப்பின், அவர் பேசாமல் இருந்துவிடுவார். ஆனால், இத்தகைய மனப்பான்மை இல்லாதவர் தடுப்பவரிடமோ அல்லது தடுக்கும் பொருளிடமோ சினம் கொள்வார். குழந்தைகளை எடுத்து நோக்கின், அவர்களிடம் அச்சத்தைக் காட்டிலும் சினமே பொதுவாகக் காணப்படுகின்றது. ஏனெனில், இவர்களது வாழ்க்கையில் சினத்தைத் தோற்றுவிக்கும் தூண்டல்கள் அச்சத்தை எழுப்பக்கூடிய தூண்டல்களைக் காட்டிலும் அதிக அளவில் காணப்படுவதாகும். அத்துடன், கவனத்தைத் தன்பால் ஈர்க்கவும் சினம் சிறு குழந்தைகளுக்கு உதவுகிறது.

சில சமயங்களில் சினமும் நமக்கு நல்ல பயனை அளிக்கின்றது. சோம்பலைப் போக்கிப் பிறரைக் காட்டிலும் நன்கு செயற்படத் தூண்டுகிறது.



இதற்காக, அடிக்கடி சினங் கொள்வதும் எமக்கு நல்லதல்ல, சினத்தைக் குறைக்க அதைத் தூண்டிவிடும் காரணங்களைக் கூடிய மட்டில் நீக்கவேண்டும். எனினும், திறமையுடன் செயலாற்ற முடியாத நிலைமைகளிலேயே சினம் எழுகிறது. ஆகவே, மாணவர்களிடையே, பல வகையான செயற்றிறன்களை வளர்ப்பதன் மூலம் சினம் எழக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறைக்கலாம்.

அந்தவகையில், மாணவர்களிடையே கல்வியில் ஆர்வத்தினை தூண்டக்கூடிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்துதல், மாணவர்கள் தங்களுக்கிடையே தாமாகவே தலைவர்களைத் தெரிவுசெய்வதனை ஊக்குவித்தல் என்பன மாணவர்கள் மத்தியில் சினம் அடைவது தொடர்பான நிலையில் இருந்து குறைந்து கற்கையில் கவனம் செலுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும்.

அனேகமாக, பிறர் தன் செயல்களில் குறுக்கிடுகிறார்கள் என்ற எண்ணமே குழந்தைகளிடம் சினத்தை உண்டாக்குகின்றது. குழந்தைப் பருவத்தில் பாடசாலை சிறுவர்கள் தங்களது சமூகத் தொடர்புகளில் ஏற்படும் குறுக்கீடுகள், தடங்கல்கள் ஆகியவற்றால் சினமுறுகின்றனர். அவ்வாறே, வாலிபப் பருவத்தில் மாணவர் தமது பெற்றோர்களது கட்டுப்பாட்டை அவ்வளவாக விரும்புவதில்லை அத்தகைய கட்டுப்பாடுகளை ஒரு தொல்லையாகவே அவர்கள் கருதுகின்றனர். இவ்வாறே, சினத்தைத் தூண்டிவிடுவதில் பசி, சோர்வு, உடல் நலக்குறை, தூக்கமின்மை, சிறு தொல்லைகள் போன்ற காரணிகளும் பங்களிப்புச் செலுத்து கின்றன.



ரினோஸ் ஹனீபா


மேலும் உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், IT Tips (தகவல் தொழில்நுட்பத்துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலை வாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.





# தெரிந்து கொள்வோம்



* உலகில் மிகப்பெரிய விமான நிலையம் எது?
  சவுதி அரேபியாவிலுள்ள 'கிங்காலித்' (King Khaled) விமான நிலையம்




* ரோம இலக்கத்தில் 2012 என்ற இலக்கத்தை எவ்வாறு எழுதலாம்?
  MMXII



* கோழிகள் இறைச்சிக்காகவும் முட்டைக்காகவும் வளர்க்கப்படுகின்றன. இவற்றில், இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழி இனங்கள் எவை?
  புரோகொப்ஸ், கைபிரோ, ஐ.டி.எல்(I.D.L), வைலிக்



* பயறு, கடுகு, கோவா போன்றவற்றின் விதைகள் முளைப்பதற்கு 3 நாட்கள் எடுக்கின்றன. நெல், நிலக்கடலை போன்ற தானியங்கள் முளைப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கின்றன?
  5 நாட்கள்



* இலங்கையின் பரப்பு 65,610 ச.கிலோமீற்றர். இதில் நிலப்பரப்பு எவ்வளவு? நீர்ப்பரப்பு எவ்வளவு?
  நிலப்பரப்பு - 62, 705 ச.கிலோமீற்றர்
  நீர்ப்பரப்பு - 2,905 ச.கிலோமீற்றர்
* இலங்கையில் முத்திரை வெளியிடப்பட்ட ISO வருட (1857-2007) நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அதன் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட முத்திரைகளின் பெறுமதிகள் என்ன?
  ரூபா 5, ரூபா 10, ரூபா 20, ரூபா 45
* இலங்கையில் வோஜ், பேதுறு எனும் கடலடித்தள மேடைகள் எதனால் முக்கியத்துவம் பெறுகின்றன?
  அதிகளவு மீன்கள் காணப்படும் இடமாகையால்
* 1597 இல் இலங்கையில் நடைபெற்ற மிக முக்கியமான வரலாற்று நிகழ்வு எது?
  மல்வானை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. முதன்முதலில் ஐரோப்பா நாடாளுமன்றுக்கு இலங்கையின் (கோட்டை இராச்சியத்தின்) உரிமை கைமாறியது.

தொகுப்பு: உடுவை பரந்தாமன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






### ஜனநாயக தொடர்பாடல் எண்ணக்கரு இயல்புகள்

* ஊடக தொடர்பாடல் செயற்பாடுகள், ஊடகக் கொள்கை உருவாக்கங்கள் ஜனநாயக சமூக அபிவிருத்திக்கு வலுவூட்டுவதாக அமைதல் வேண்டும்.
* சுதந்திரம், சமத்துவம், உரிமையை வலுவூட்டப் பங்காற்றுதல் வேண்டும்.
* ஊடக ஒழுக்கக்கோவை அடிப்படை அம்சங்கள் ஜனநாயக ஊடக செயற்பாட்டிற்கு வழிகாட்டியாகக் கொள்ளப்படுகின்றன.
* ஜனநாயக நாட்டின் இறையாண்மை, இறைத்துவம், உரிமைகள், குடியுரிமை அடையாளங்கள் பாதுகாக்கப்படல் வலியுறுத்தப்படுகின்றது.
* பல்கலாசார சமூக



பிரதிநிதித்துவம் வலுவூட்டப்படுகின்றது.
* ஜனநாயகம் பற்றிய பொதுசன அபிப்பிராயத்தையும், குடிமக்களின் உரிமைகளையும் வலியுறுத்தல்.

### தொடர்பாடல் வளர்ச்சிப்போக்கு


மனித சமூக செயற்பாட்டின் அடிப்படை இயல்பூக்க செயற்பாடாக, தொடர்பாடல் செயன்முறை அமைகின்றது. மனிதனின் அடிப்படைத் தேவைகளின் முதன்மைக் கூறாகவும், மனித சிந்தனையை உருவாக்குவதிலும், மனித-சமூக இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதிலும் தொடர்பாடல் கருமங்கள் அடிப்படையாகின்றன. மனிதன் தன்னுடைய எண்ணத்தைப் பரிமாற்ற முற்பட்டதன் வெளிப்பாடாகவே, தொடர்பு செயன்முறை உருவாக்கம் பெற்றது. மொழியின் தோற்றத்திற்கு முன்பாகவே, தொடர்பு செயன்முறை மனித சமூதாயத்தில் தோற்றம் பெற்றது. தொடர்பு முயற்சியின் வெளிப்பாடாகவே மொழியின் உருவாக்கம் ஏற்பட்டது.


தகவல் தொடர்பு வளர்ச்சி அதாவது, மனிதனுடைய தகவல் தொடர்பு வளர்ச்சி, அதன் தோற்றம் பற்றிய புரிதல்களுக்கு முதலில் மனித இனத்தின் தோற்றம் பற்றிய சிந்தனைகள் மிகவும் அடிப்படையாக அமைகின்றன. ப்ரோகொன்சல் (Proconsul), ட்ரையோபிதிகஸ் (Dryopithecus), ராமபிதிகஸ் (Ramapithecus), அஸ்ட்ரலோபிதிகஸ் (Australopithecus), ஹோமோ ஹெபிலிஸ் (Homo habilis), ஹோமோ எரக்டஸ் (Homo erectus) என்ற அடிப்படையில் பரிணாம வளர்ச்சிக்குட்பட்ட மனித இனம் நியாண்டதாஸ், குரோமாக்கன் என்ற இருநிலைப்பட்ட மனித வர்க்கமாக வளர்ச்சி கண்டது. இத்தகைய பின்னணியுடன் தொடர்புபட்ட வளர்ச்சியாகத் தகவல் தொடர்பு நிலைகளை இனங்கண்டுகொள்ள முடிகின்றது.

மனித இனத்தின் தோற்றம் 70 கோடி வருடங்களுக்குட்பட்ட பரிணாம வளர்ச்சியின் முதிர்வாக நோக்கப்படுகின்றது. அவர்களுக்கு தகவலைப் பரிமாறிக்கொள்கின்ற ஆற்றல் காணப்பட்டது. அதன் தொடர்ச்சியான வளர்ச்சிப் படிமுறைகளாக, கால அடிப்படையில் மனிதத் தகவல்தொடர்பு விருத்தி நிலைகளை அவதானிக்க முடிகின்றது.


(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.







விமானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்கள், எழுத்து வடிவில் மேகங்களில் தரப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு கீறிட்டு இணையுங்கள்.





எண் வரிசைப்படி, புள்ளிக்கோட்டினை இணைத்து உருவை அறிந்து நிறந்தீட்டுக.



முக்கோணங்களுக்கு வர்ணமிடுக.



ஒவ்வொரு படங்களிலும் தரப்பட்டுள்ள பெரிய உருவை வட்டமிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Audio பிரியர்களுக்கான தளம்




கேட்கும்போதெல்லாம் ரசித்து மகிழக்கூடிய Voice mail களை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா?, இவ்வாறு ரசித்து மகிழக்கூடிய இத்தகைய Voice mail களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அவ்வாறு விரும்புகிறீர்கள் என்றால், அதற்கான இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

'audioo' எனும் பெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்த இணையத் தளம், Voice mail களை உலகோடு பகிர்ந்து கொள்வதற்கான இணையத்தளமாக அமைந்துள்ளது. உலகில் உள்ள ஒலிகளுக்கெல்லாம் ஓர் இருப்பிடமாகத் திகழ வேண்டும் எனும் உயர்ந்த லட்சியத்தோடு, இந்தத் தளத்தை உருவாக்கி இருப்பதாக அதன் நிறுவனர்கள் கூறுகின்றனர். மனித ஒலிகளில் எத்தனை வகைகள் இருக்கின்றனவோ, அத்தனையும் ஓரிடத்தில் திரட்டித் தரும் தளமாக audioo திகழ வேண்டும் என்பது அவர்களது விருப்பமாம்!




அதன் ஆரம்பக் கட்டமாக, செல்போன் யுகத்தில் எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய Voice mail செய்திகளை பகிர்ந்து கொண்டு பதிவு செய்யும் வசதியை உருவாக்கித் தந்துள்ளனர். இணைய வாசிகள் தங்களுக்கு வந்த சுவாரஸ்யமான Voice mail களை இத்தளத்தில் பகிர்ந்துகொள்ளலாம். இவ்வாறு பகிர்ந்துகொள்ளும் Voice mail களை, அவற்றின் தன்மைக்கேற்ப சுவையானவை, சிரிக்கக்கூடியவை, பிரபலமானவை என்று பல்வேறு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. audioo கேட்டு ரசித்த பின்னர் இவற்றை நண்பர்களோடு டுவிட்டர், ஃபேஸ்புக் தளங்களின் வழியே பகிர்ந்தும்கொள்ளலாம். சிறந்தது எனக் கருதும் செய்திகளுக்கு வாக்களிக்கும் வசதியும் உண்டு. Voice mail களில் சில விவகாரமாகவும் வில்லங்கமாகவும் இருந்தாலும் கூட பெரும்பாலானவை ரசிக்கக்கூடியதாகவே இருக்கின்றன.







எல்லாம் சரி... இந்த Voice mail பகிர்வால் என்ன பயன் இருக்கிறது? என நீங்கள் கேட்கலாம். அந்தவகையில், உலகம் இப்போது என்ன பேசிக் கொள்கிறது? என்பதை இந்த Voice mail உணர்த்தக்கூடும் என்று audioo குழு விளக்கம் தருகிறது. அதுமட்டுமல்லாமல், குறிப்பிட்ட இடங்களைத் தேர்வுசெய்து அங்கு பதிவாகும் Voice mail களையும் கேட்கலாம் என்பதால், நம்மைச் சுற்றி உள்ளவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்? என்பதையும் நமது பகுதியில் தற்போது பேசப்படும் விடயமாக எது இருக்கிறது? என்பதையும் இத்தளம் உணர்த்த வல்லது.

ஆக, எதையும் கேட்டு ரசிப்பதில் இன்பம் காண்பவர்களுக்கு இந்த தளம் சுவை மிக்கதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கான இணையத்தள முகவரி www.audioo.com என்பதாகும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜனவரி மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜய் நுட்பம்

2013, ஜனவரி, 02, புதன்கிழமை

# Online மூலம் நூல்கள் வாங்கலாம்!




உலகளவில் விற்பனை செய்யப்படுகின்ற, எமக்குத் தேவையான அத்தனை நூல்களையும் Online இல் இருந்தபடியே பணம் செலுத்தி வீட்டிற்கு வரவழைத்துக்கொள்ளக்கூடிய வசதியைத் தரும் இணையத்தளமே amazon ஆகும்.

amazon.co.uk

இதில் பெரும்பாலும் அனைத்து எழுத்தாளர்களினதும் நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இத்தளத்தில் நூலின் பெயர் அல்லது எழுத்தாளரின் பெயர் போன்றவற்றை வழங்கி நூலைத் தேடி எடுக்க முடியும். நூலின் விலையை Online மூலம் செலுத்தி வீட்டுக்கே நூலைத் தருவித்துக்கொள்ளவும் முடியும். இதற்கான இணையத்தள முகவரி www.amazon.co.uk என்பதாகும்.

# செல்ஃபோனில் டியூஷன்




பாடசாலையில் வழங்கப்படும் வீட்டு வேலைகளை (Home work)வீட்டில் செய்து கொண்டிருக்கும் போது, பாடங்கள் தொடர்பில் சந்தேகங்கள் ஏற்பட்டால், மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வர். ஆனால், இனி அது குறித்து கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில், கையில் இருக்கும் செல்ஃபோன் வழியாகவே, எந்தப் பாடத்தில் என்ன சந்தேகம் என்பதைக் குறிப்பிட்டு உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் சந்தேகங்களுக்கு ஆசிரியர் ஒருவர் செல்ஃபோன் வழியாகவே அதற்கு விடையளிப்பார்.

இப்படி செல்ஃபோன் மூலம் கணிதம் உள்ளிட்ட பல பாடங்கள் தொடர்பில் தமக்கு ஏற்படும் சந்தேகங்களை மாணவர்கள் கேட்டறிந்து தெளிவுபெறலாம்.




மாணவர்களை தெளிவுபடுத்தும் செல்ஃபோன் செயலியாக 'motuto' அறிமுகமாகியுள்ளது. அந்தவகையில், 'செல்ஃபோன் வழியான டியூஷன் சேவை' என்றும் இந்த செயலியைக் கருதலாம். iPhone மற்றும் Android ஃபோன்களில் செயற்படக்கூடிய இந்த செயலியை, மாணவர்கள் download செய்துகொண்டால், வீட்டு வேலைகளில் ஏதேனும் சந்தேகம் என்றால், உடனே இந்த செயலி வழியே அதனை குறிப்பிட்டு உதவி கோரலாம். அதற்கமைய, இந்த செயலியிலேயே சந்தேகத்தை குறிப்பிடுவதற்கான வழியும் இருக்கிறது. விளக்கம் தேவைப்படும் கேள்வியை தெரிவித்துவிட்டு, அவசியம் என்றால் நீங்கள் செய்து பார்த்த கணக்கை வரைபடத்தோடு அப்படியே கெமரா மூலம் ஸ்கேன் செய்தும் அனுப்பி வைக்கலாம். அப்போது தகுதி வாய்ந்த ஆசிரியர் ஒருவர் அந்த, சந்தேகத்திற்கான விளக்கத்தை செல்ஃபோன் திரையிலேயே, அளிப்பார். அமெரிக்கா மற்றும் கெனடாவில் உள்ள மாணவர்களைக் கருத்தில் கொண்டு இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது என்றாலும், இதேபோன்று செயலியை எமது மாணவர்களுக்காகவும் உருவாக்கலாம்தானே! செயலி முகவரி http://www.motuto.com/ என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்

தமிழ்மொழியில் யுனிகோட் (Unicode) எழுத்து முறையைப் பயன்படுத்தி பல இணையத்தளங்கள் இணையப்பரப்பில் காணப்படுகின்றன. BBC செய்திச் சேவையின் இணையத்தளம் பல மொழிகளிலும் காணப்படுகின்றது.




# BBC தமிழ்




அதற்கமைய, தமிழ்மொழியில் அமைந்த BBC தமிழ் இணையத்தளமானது, செய்தி, வானிலை, நினைவில் நின்றவை, சிறப்புக் கட்டுரைகள் என பல விடயங்களை அள்ளி வழங்குகின்றது.

அத்தோடு, இந்த இணையத்தளத்தில் கருத்துக் கணிப்பீடும் நடாத்தப்படுகின்றது. அது மட்டுமல்லாது, தெற்காசிய நாடுகளின் செய்திகளுக்கான (ஆங்கிலம்) தொகுப்பும் இந்த இணையத்தளத்தில் காணப்படுகின்றது. இந்த இணையத்தளத்தின் முகவரி http://www.bbc.co.uk/tamil/ என்பதாகும்.

# Gmail இன் புதிய Compose & Reply வசதியை Disable செய்வதற்கு...

மில்லியன் கணக்கான பயனர்களைக் கொண்டுள்ள Gmail, நாள்தோறும் புத்தம் புதிய வசதிகளை அறிமுகப்படுத்திகொண்டே உள்ளது.

அந்தவகையில், அண்மையில் வெளியான வசதி Compose &Reply என்பதாகும். இந்த வசதி அனைவரையும் கவரும் என்று கூற முடியாது.

எனவே, இதனை மீண்டும் பழைய நிலைக்கே மாற்றுவதற்கு என்ன செய்யலாம்?

இதற்கு முதலில்,

1. உங்கள் Gmai கணக்கில் நுழைந்துகொள்ளுங்கள்.
2. பின் Compose என்பதை Click செய்யவும்.
3. விண்டோ திறந்துகொண்டதும், வலதுபக்கத்தின் கீழ் மூலையில் உள்ள More Menu Icon என்பதைக் க்ளிக் செய்யவும்.
4. அதில் Switch Back to Old Compose என்பதை தெரிவுசெய்யவும். அவ்வளவுதான்! பழைய நிலைக்கு மாறிவிடலாம்.



மீண்டும் புதிய நிலைக்கு மாற்ற வேண்டும் என்றால், New Compose Experience என்பதைத் தெரிவுசெய்யவும்.






# விளையாட்டு வீரர்களிடமிருந்து நேரடியாக தகவல்களைப் பெறுவதற்கு

## 'Jockipedia'




'Jockipedia' பற்றித் தெரியுமா? இதனை 'விளையாட்டு வீரர்களுக்கான விக்கிபீடியா' என்றும் சொல்லலாம்.








விளையாட்டு வீரர்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் ரசிகர்களுக்கு இத்தளம் பயனளிப்பதாக இருக்கும்.

பெரும்பாலும் விளையாட்டு வீரர்களைப் பற்றிய தகவல்களை பல்வேறு இணையத்தளங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம். என்றாலும், Jockipedia வில் உள்ள சிறப்பு என்னவென்றால், சம்பந்தப்பட்ட வீரர்களிடம் இருந்தே நேரடியாகத் தகவல்களைப் பெறும் வகையில் இது அமைந்துள்ளது என்பதாகும். அது எப்படி என்றால்... இந்த தளத்தில் வீரர்களுக்கான பக்கத்தில் அவர்கள் பற்றிய சுருக்கமான அறிமுகத்தோடு, அவர்களின் இணையத்தளம், வலைப்பதிவுகள், டுவிட்டர் பக்கம் ஆகியவற்றுக்கான இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கும். அத்தோடு, அவர்களின் ஃபேஸ்புக் பக்கம், மைஸ்பேஸ் பக்கம், யூடியூப் ச்செனல் ஆகியவையும் இடம்பெற்றிருக்கும். குறிப்பிட்ட அந்த வீரர் டுவிட்டர் மூலம் தீவிரமாக தகவல்களைப் பகிரும் பழக்கம் கொண்டவர் என்றால், அவற்றை உடனுக்குடன் இங்கேயும் தெரிந்துகொள்ள முடியும்.

இத்தளத்தில் தற்போதளவில் மூவாயிரத்திற்கும் அதிகமான வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆனால், ரசிகர்கள் நினைத்தால் புதிய வீரர்களுக்கான பக்கத்தை ஆரம்பித்து தகவல்களைச் சேர்க்கலாம். ஆகவே, http://www.jockipedia.com/wiki/Main_Page எனும் பக்கத்திற்கு சென்றுதான் பாருங்களேன்.

# Java bytecode

Java bytecode என்பது, ஜாவா மெய்நிகர் கணினி (Java Virtual Machine) செயற்படுத்தும் அறிவுறுத்தல்களாகும். ஒவ்வொரு bytecode உம் ஒரு byte நீளத்தைக் கொண்டு காணப்படுகிறது. இதனாலேயே, இது bytecode எனும் பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. bytecode கள் 256 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதும் அனைத்து bytecode களின் பெறுமதிகளும் பாவிக்கப் படுவதில்லை.




Java Virtual Machine, ஜாவா கணினிமொழி மற்றும் இதர ஜாவா இயங்குதளத்தின் அசல் படைப்பாளியாகிய Sun Microsystem எனும் நிறுவனம் பயன்படுத்த முடியுமான bytecode களை வரையறுத்து வைத்துள்ளது.

bytecode கள் சுயமாகவே கணினி செய்நிரலாளரால் எழுதப்படலாம். ஆனாலும், இக்காலத்தில் Compilers எனப்படும் கணினி மொழிகளைத் தொகுக்கும் மென்பொருள்கள் அதிகளவில் புழக்கத்தில் இருப்பதால், bytecode களை உருவாக்குவது மிகவும் இலகுவானதாகும். உதாரணமாக GNU Compiler for Java எனும் மென்பொருளைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இங்கே வெட்டவும்

# புகைப்பட எடிட்டிங் சேவை




நம்மில் பலர் கெமரா வசதியுடன் கூடிய செல்ஃபோன், டிஜிட்டல் கெமரா என கையில் வைத்திருக்கும் நிலையில் தேவைக்கேற்ப தேவையான சந்தர்ப்பங்களில் புகைப்படங்களை எடுப்பதும் பகிர்வதும் சுலபமான காரியமாகவே உள்ளது.

இவையெல்லாம் எளிதாக இருக்கும் நிலையில், தற்போது அந்த புகைப்படங்களைத் திருத்துவதும் (Editing) எளிதாகியிருக்கின்றது. இதற்கமைய, புகைப் படத்தின் பின்னணி மற்றும் வர்ணங்களைத் திருத்தி புகைப்படத்தை மேலும் மெருகேற்றலாம்.





இதற்கான சாதனங்களும் மென்பொருளும் ஏராளமாக இருக்கின்றன. என்றாலும், அவற்றைப் பயன்படுத்த பயிற்சியும் தேர்ச்சியும் ஒருவருக்கு இருக்கவேண்டும். எனினும், அத்தகைய பயிற்சியும் தேர்ச்சியும் இல்லாமலேயே, புகைப்படங்களை மெருகேற்ற வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் உங்களுக்கு இருக்குமானால், அதற்காக இப்போது ஒன்லைன் (Online) புகைப்பட எடிட்டிங் சேவைகள் இருக்கின்றன. அதாவது, இணையத்தின் மூலமே புகைப்படங்களைத் திருத்தி மேம்படுத்திக்கொள்ளலாம்.

இந்த வசதியை வழங்குகிறது picfull.com எனும் இணையத்தளம். இந்த தளம் மிக எளிதாகப் புகைப்படங்களை திருத்திக்கொள்ள வழியமைக்கிறது. இதற்காக, புகைப்படத்தை இத்தளத்தில் பதிவேற்றிவிட்டு, அதற்குத் தேவையான பின்னணி அமைப்பு மற்றும் இதர திருத்தங்களை தேர்வுசெய்து, எல்லாவற்றையும் ஒரே க்ளிக்கில் செய்துமுடித்துவிட முடியும். இவற்றை தேர்வு செய்து புகைப்படத்தை அழகாக்கிக்கொண்ட பின்னர், அதனை அப்படியே கணினியில் சேமித்தும் கொள்ளலாம். அவ்வாறே, மின்னஞ்சல், ஃபேஸ்புக் வழியே நண்பர்களோடு பகிர்ந்தும்கொள்ளலாம். இதற்கான இணையத்தள முகவரி: http://www.picfull.com என்பதாகும்.

# Facebook Messenger இல் SMS

இனிமேல் Facebook Messenger இன் மூலம் SMS அனுப்ப முடியும்.






இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை ஃபேஸ்புக் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த சேவையை ஃபேஸ்புக் கணக்கு மற்றும் மின்னஞ்சல்கூட இல்லாமலும் பெறலாம்.

இந்த புதிய Facebook Messenger Application ஆனது, முதலில் இந்தியா, இந்தோனேஷியா, வெனிசுவெலா, அவுஸ்திரேலியா மற்றும் தென் அமெரிக்காவிலும் பின்னர் ஏனைய நாடுகளிலும் அறிமுகப் படுத்தப்பட உள்ளது. இந்த சேவையைப் பெற பயனர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண் மட்டும் போதுமானது என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது.



# WEEE man



WEEE man என இனங்காணப்படும் இந்த உருவமானது, Royal Society of arts (RSA) எனும் குழுமத்தினால் உருவாக்கப்பட்டதாகும். இது மூன்று தொன் எடையுடைய இலத்திரனியல் கழிவுகளை ஒன்றுசேர்த்து உருவாக்கிய சிற்பமாகும். இதன் உருவாக்கத்தில் பல்வேறுபட்ட இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கணினித் திரைகள், அச்சுப்பொறிகள், பாரிய விளக்குகள், செய்மதி என்டனாக்கள், சுட்டி (Mouse), Toasters, வெக்கியும் க்ளீனர், ஹீட்டர், சலவை இயந்திரங்கள், Microwave Oven எனப் பல்வேறு இலத்திரனியல் சாதனங்களின் உதிரிப்பாகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 2013, ஜனவரி, 02, புதன்கிழமை V

# மூக்குள்ள Mobile Phone







இந்த நவீன உலகில், தொழில்நுட்ப வித்தைகளுக்குள் அகப்பட்டு உண்டாக்கப்படும் உயரிய சாதனங்கள் யாவும், நாளுக்கு நாள் புதிய புதிய பண்புக்கூறுகளைப் பெற்று விஸ்தீரணமும் விவேகமும் அடைகின்றதென்றே எண்ணவேண்டியுள்ளது. அதற்கமைய கணினிக்கு செயற்கை ஒட்பம் (Artificial Intelligence - AI) வழங்கும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. அதன் விளைவால் பல முன்னேற்றகரமான விளைவுகள் உண்டாகியுள்ளன.

கையடக்கத் தொலைபேசியில் 'இலத்திரனியல் மூக்கு' காணப்பட்டு உங்களது சொந்த மணத்தை, கடவுச்சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தும் காலம் உருவானால் எப்படியிருக்குமென நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? இது வெறும் கற்பனையல்ல. இன்னும் சில ஆண்டுகளில் அரங்கேறப்போகும் நிஜம்.

இத்தொழில்நுட்ப அடைவுகள் சாத்தியமாக்கப்படும் நிலையில் கையடக்கத் தொலைபேசிகள் பார்த்தல், கேட்டல், நுகர்தல் போன்ற புலன் உணர்வுகளைக் கொண்டுவரும். இந்த அடைவுகளை சாத்தியமாக்கும்

நெனோ (Nano) தொழில்நுட்பம், மிகவும் நுண்ணிய பொருள்களைப் பற்றிய விஞ்ஞானம் ஆகும்.இங்கு இயந்திரங்களும் பொருள்களும் அணுக்களின் பருமனளவில் உருவாக்கப்படும். இத்தொழில்நுட்பத்தில் பாவிக்கப்படும் பிரதான கூறுகளின் அளவு நெனோ மீற்றரிலேயே அளக்கப்படும். அதாவது, 1 மீற்றரை ஒரு பில்லியனால் பிரிக்க வருவதே ஒரு நெனோ மீற்றராகும்.இதுதான் விஞ்ஞானத்தின் விந்தையான Nano Technology ஆகும்.



இந்தத் தொழில்நுட்ப வருவிளைவு பற்றிய ஆய்வில் ஈடுபடும் குழுவின் உபதலைவர் டேவிட் பிஷோப் (David Bishob) கருத்துத் தெரிவிக்கையில், ''தொலைபேசி சம்பாஷனைகளின் தெளிவையும் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் பலப்படுத்தும் நோக்குடனேயே கையடக்கத் தொலைபேசிகளுக்கு புலன் உணர்வுகளைப் புகுத்தும் திட்டம் உருப்பெறறது'' என்றார்.



இன்னும் ஓரிரு வருடங்களில் கையடக்கத் தொலைபேசிகளின் ஒலிவாங்கிகள் (Microphones) மனிதனின் தலைமுடியின் விட்டத்தின் இரு மடங்கான விட்டமுடைய மிக நுண்ணிய ஒலிவாங்கிகளால் பிரதியிடப்படும். இவை உணர்த்திறன் அதிகமுடையதாக அமைவதோடு, பின்னணியில் கேட்கும் இரைச்சல்களைத் தடுத்தாளும் தன்மை உடையதாகவும் இருக்கும் என்று மேலும் குறிப்பிடும் டேவிட், இன்னும் மூன்று, நான்கு ஆண்டுகளில் கையடக்கத் தொலைபேசிகள் 'நீர்மக் கண்' (Liquid Eye) உடையதாக அமையப் பெறுமென்றும் எதிர்வுகூறுகின்றார்.

நீர்மக் கண் - மனிதனின் கண்ணை ஒத்ததாக அமைவதோடு, தொலைபேசி உரையாடலில் கலந்துகொள்பவரைக் கண்காணிக்கும் கருவியாக அமையுமெனவும் சொல்லப்படுகின்றது. இந்த வளர்ச்சிப்படியின் அடுத்த கட்டமாக இன்னும் சில வருடங்களில் கையடக்கத் தொலைபேசிகள் இலத்திரனியல் மூக்கு (Electionic nose) கொண்டு வலம் வருமெனவும் இதன்மூலம் கையடக்கத் தொலைபேசி உரிமையாளரைத் தவிர வேறு எவராலும் கையாள முடியாத வகையில் கடவுச்சொல்லுக்குப் பதிலாக மணம் பிரதியிடப்படுமென்றும் டேவிட் எதிர்வுகூறுகின்றார்.

இந்த எதிர்வுகூறல்களைப் பார்க்கின்றபோது, இன்னும் சில வருடங்களில் கையடக்கத் தொலைபேசிகள் மனிதனைப் போன்று புலன் உணர்வினைக் கொண்ட உயிரியல் கூறாக காட்சிதரும் என்றே நினைக்க வேண்டியுள்ளது. இதற்கமைய, தொழில்நுட்பத்தின் உயிர்ப்பான மாறுதல்களால், புதிய பல எண்ணங்களுக்குள்ளேயே, அடங்காத எழுச்சிகள் அரங்கேறலாம். ஆகவே, அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக வேண்டும். மூக்குள்ள Mobile Phone ஆனது, தகவல் தொழில்நுட்பத்தோடு இணைந்த எதிர்காலம் பற்றி நிறையவே சிந்திக்க வைக்கிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவம்

# கற்றலின்போது நுட்பங்களைக் கையாள வேண்டும்

கல்வி கற்கும்போது, தான்தோன்றித்தனமாக கற்றலை மேற்கொள்ளாமல் பல்வேறு நுட்பங்களைப் பாவித்து, எமக்குப் பயன்படும் வகையில் கற்க வேண்டும். கல்வி கற்பது என்பது, ஒரு செயன்முறையான அம்சமாகும். ஆகவே, அதை செயன்முறைப்படுத்தும்போது, படிப்படியாக ஒவ்வொரு முறையையும் பாவித்து இலகுவாக கற்றலை நகர்த்த வேண்டும்.

பொதுவாக, ஒரு பாடத்தை வாசித்து-குறிப்பு எடுத்து-விளக்கங்கள் எழுதி என ஓர் ஒழுங்குமுறையிலேயே கற்றல் அமைகிறது. இந்த ஒவ்வொரு ஒழுங்குமுறையின்போதும் அதற்குத் தகுந்தாற்போல் நாம் ஒவ்வொரு நுட்பத்தையும் கையாள வேண்டும். இதன்போதே முறையான கற்றலை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.



ஒரு பாடத்தை வாசித்து விளங்கும்போது, ஒரே தடவையில் முழுமையாக வாசித்துக்கொண்டே சென்றுவிடுவதும் அதனுடன் சார்ந்த வினாக்களையும் அப்போதே மீட்டிப் பார்த்துக்கொண்டு செல்வதும் மாணவர்களது இயல்பாகும். எனினும், இந்த முறையானது, சோம்பலையும் அசதியையுமே ஏற்படுத்தும்.



எந்த விடயத்தையும் ஒரே தடவையில் செய்வதிலும் அதை பகுதி பகுதியாகப் பிரித்துச் செய்வதிலும் வித்தியாசம் உள்ளது. ஒரு விடயத்தை ஒரே தடவையில் செய்வதால், அது செம்மையான முறையில் நிறைவேறுவது குறைவு. ஏனெனில், அங்கு செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்குமே தவிர, சிறப்பாக செய்யவேண்டும் என்ற எண்ணம் குறைவாகவே காணப்படும்.

எனவே, கற்கும்போது, ஒவ்வொரு பாடத்தையும் பகுதியாகப் பிரித்து உள்வாங்கிக் கற்க வேண்டும். இவ்வாறு பகுதி பகுதியாகப் பிரித்து வாசித்துக் கற்றுக்கொள்ளும்போதுதான் அது சம்பந்தமான மேலதிக விளக்கத்தைப் பெற முடியும். அத்துடன், குறித்த பகுதியுடன் தொடர்பான வினாக்களை செய்து பார்த்து குறிப்பிட்ட பகுதியில் தெளிவைப் பெற வேண்டும்.

அத்துடன், பாடத்தைப் பிரித்துக் கற்பது போன்றே நேரத்தையும் பகுதி பகுதியாகப் பிரித்து, ஒவ்வொரு நேரத்திலும் கற்க வேண்டிய பாடத்தை வரையறை செய்துகொண்டு கற்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்கள் காணப்படும்போது, ஒவ்வொரு பாடத்தையும் எப்போது கற்க வேண்டும்?, என்ன கற்க வேண்டும்? என்ற திட்டத்தைத் தீட்டிக்கொள்ள வேண்டும்.


இவ்வாறு பிரித்துக் கற்றுக்கொள்வதால் சந்தேகங்களை இலகுவில் நிவர்த்தி செய்யலாம். பரீட்சை எழுதும்போதுகூட, கற்ற விடயங்களை இலகுவாக மீட்டி, பரீட்சையை சிறப்பாக எதிர்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.




எம்.ஏ.எஃப். சப்ரானா

# புதன் கோளில் பனிக்கட்டிகள்

சூரியனுக்கு மிக அருகிலுள்ள புதன் கோளின் வடபகுதியில் அதிகளவு பனிக்கட்டிகள் இருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.



கடந்த 2004 ஆம் ஆண்டு புதன் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நாஸாவினால் அனுப்பப்பட்ட மெசெஞ்ஜர் விண்கலம் அனுப்பிய தகவல்களை ஆராய்ந்ததை அடுத்தே, இது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அந்த தகவலின்படி, புதனின் வடமுனையில் நீர் உறைந்த நிலையில் இருப்பதாகவும் அதில் பெரும்பகுதி சேதன மற்றும் எளிதில் ஆவியாகும் மூலக்கூறுகள் அடங்கிய கரும் பொருட்களைக் கொண்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.



புதன் கோளில் இருந்து வெளிவரும் நியூத்திரன்களை அளக்கக் கூடிய 'நியூத்திரன் நிறமாலை மானி' ஒன்று மெசெஞ்ஜர் விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இந்த நிறமாலைமானியின் மூலமே பனிக்கட்டிகளின் இருப்புப் பற்றி கண்டறியப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட மெசெஞ்ஜர் விண்கலம், 2011 மார்ச் மாதத்தில் புதனின் சுற்றுவட்டத்தை அடைந்தது. புதனின் சுற்றுவட்டத்தை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விண்வெளித் தகவல்கள்

# சூரியக் குடும்பத்தின் எல்லையில் 'காந்த நெடுஞ்சாலை' கண்டுபிடிப்பு




கோள்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, 1977 ஆம் ஆண்டு நாஸாவினால் விண்ணுக்கு ஏவப்பட்ட 'வொயேஜர் 1' எனும் ஆளில்லா விண்கலம், நமது சூரியக் குடும்பத்தின் விளிம்பில், காந்தப் புலமுள்ள புதிய வலயமொன்றைக் கண்டுபிடித்துள்ளது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த 'காந்த நெடுஞ்சாலை' (magnetic highway), விண்வெளியையும் நட்சத்திரக்கூட்டத்தையும் இணைப்பதாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையிலும் இப்பகுதியை எந்தவொரு விண்கலமும் கண்டுபிடித்திருக்கவில்லை என்பதனால், வொயேஜர் 1 இன் இந்தக் கண்டுபிடிப்பானது, விஞ்ஞானிகளிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த காந்த நெடுஞ்சாலை 5 முதல் 10 வானிலை அலகுகள் தடிப்பானவையாக (அதாவது, சூரியனில் இருந்து பூமிக்கிடையேயான தூரத்தின் 5 முதல் 10 மடங்கு தூரம்) இருக்கலாம் என நாஸா விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இந்த அனுமானம் உண்மையாக இருக்குமானால், வொயேஜர் 1 விண்கலம் இப்பிராந்தியத்தைத் தாண்ட குறைந்தது மூன்று ஆண்டுகளாவது செல்லும்.

வொயேஜர் 1 விண்கலம் தற்போதளவில் சூரியனில் இருந்து 11 பில்லியன் மைல்களுக்கு அப்பால் சென்றுகொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலாவது மந்திராலோசனை சபை

பிரித்தானியர்கள் இலங்கையில் மந்திராலோசனை சபை ஒன்றை ஏற்படுத்தினர். உப ஆளுனரும் பிரதம தளபதியும் பிரதம நீதிபதியும் பிரதம செயலாளரும் மேலும் இருவரும் இதில் அங்கத்தவர்களாக இருந்தனர்.


இதன்மூலம் இலங்கைக்கே உரித்தான சிவில் நிர்வாக சேவை ஆரம்பமாகியது. இதன் பின் இந்நாட்டில் சிவில் சேவையில் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்த சென்னை சிவில் அதிகாரிகளுக்கு இலங்கையில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு இலங்கையில் ஏற்படுத்திய சிவில் நிர்வாகமே பிரித்தானிய மன்னருக்குரிய கீழைத்தேய நாடுகளில் மிகவும் பழமை [illegible] சிவில் நிர்வாகமாகும். இந்த சிவில் நிர்வாக அங்கத்தவர்களில் பெரும்பாலானோர் சாஸ்திரிய சம்பிரதாயங்கள் பலவற்றில் கற்றுத் தேறியவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் இலங்கையின் வரலாறு மற்றும் தொல்பொருள் துறையில் விசேட தேர்ச்சி பெற்றவர்களாகத்

முதன்முறையாக ஆய்வுசெய்து சீர்திருத்தம் மேற்கொண்டு மொழிபெயர்ப்புச் செய்ததும் இச்சிவில் அதிகாரிகளில் இருவரே என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிவில் அதிகாரிகளாக வரி அறவிடும் முகவர்களும் பிரதேச நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர். இலங்கையின் நீதித்துறை சம்பந்தமாகப் புதிய முறைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்று பிரித்தானிய மன்னரால் வெளியிடப்பட்டது. 1799 இல் நீதிமன்றம் குறித்த விடயமொன்றைக் கலந்துரையாடுவதற்கு கொட்ரின்டன் எட்மன்ட் கெரின்டன் என்பவர் இங்கிலாந்திற்குச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்காந்த அலைகள்



மின்காந்த அலைகள் மின்காந்தப் புலங்களால் ஏற்படுகின்றன. ஏற்றம் பெற்ற இலத்திரன்கள் அதிரும்போது, அவற்றிலிருந்து மின்காந்த அலைகள் உற்பத்தியாகின்றன. ஏற்றம் பெற்ற துணிக்கைகள் அதிரும் வேகம் வேறுபடுவதால் உருவாகும் மின்காந்த அலையின் வேகம் மாறுபடுவதில்லை. அவற்றின் மீடிறன், அலைநீளம் வேறுபடும். இதனால், மின்காந்த அலைகள் பல்வேறு அலை வகைகளாகக் காணப்படுகின்றன.

**மின்காந்த அலையின் இயல்புகள்**

* இவை கடத்தப்படுவதற்கு ஊடகம் அவசியம் இல்லை.
* இவை குறுக்கு அலைகள் ஆகும்.
* இவை வெற்றிடத்தில் $3X10^{5}$ $m5^{1}$ வேகத்தில் பயணிக்கக்கூடியவை.
* மின்காந்த அலைகள் மின்னியல்புகளையும் காந்த இயல்புகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றன.

வெஸ்மியா வெஸீர், மாறைதாருள்/ உலூம் ம.வித்.,மாத்தறை.

# உங்களுக்குத் தெரியுமா?

* ஒரு லீப் வருடம் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வரும். (உ+ம்) 2000, 2004, 2008, 2012, 2016, 2020
* லீப் வருடத்தில் பெப்ரவரி மாதம் 29 நாட்களைக் கொண்டிருக்கும்.
* லீப் வருடத்தில் பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி பிறந்தவர்கள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை அதாவது, லீப் வருடத்தில் மாத்திரமே பிறந்தநாளைக் கொண்டாட முடியும்.
* சாதாரண வருடத்தில் 28 நாட்களைக்கொண்ட மாதம் - பெப்ரவரி
* 30 நாட்களைக் கொண்ட மாதங்கள் - ஏப்ரல், ஜூன், செப்டெம்பர், நொவெம்பர்
* 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் - ஜனவரி, மார்ச், மே, ஒகஸ்ட், ஜூலை, ஒக்டோபர், டிசம்பர்

பாத்திமா கதீஜா,
கனேத்தன்னை மதீனா மு.ம.வித்., ஹிங்குளை.

# சார்க் நாடுகளும் தலைநகரங்களும்

* இந்தியா - புதுடில்லி
* நேபாளம் - காத்மண்டு
* இலங்கை - கொழும்பு
* பூட்டான் - திம்பு
* பாகிஸ்தான் - இஸ்லாமாபாத்
* மாலைதீவு - மாலே
* ஆப்கானிஸ்தான் - காபூல்
* பங்களாதேஷ் - டாக்கா

ஆர்.எம்.ரிஸ்லின், கெப்பிடிய மு.ம.வித்., கலேவெல.

# ருவன்வெலிசாய




ருவன்வெலிசாயவானது, துட்டகைமுனுவால் அநுராதபுரக் காலத்தில் கி.பி 137 காலப்பகுதியில் கட்டப்பட்டது. இது மகாதூபம், மகாசாய ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றது. 400 அடி உயரம் கொண்டுள்ள இது வெசாக் பௌர்ணமி தினத்திலேயே, அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணிக்கப்பட்டது. இதன் அடிக்கல் நாட்டு விழாவிற்காக காஷ்மீர், பல்லவ நாடுகளில் இருந்து பிக்குகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். இங்கு இந்திரகுப்ததேரரினால் புத்தரின் வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதனது நான்கு புற நுழைவாயில்களிலும் வாகல்கட எனும் சிற்பம் அமைந்துள்ளது. துட்டகைமுனுவால் அமைக்கப்பட்ட இந்த நிர்மாணப்பணிகள் அவரின் சகோதரனான சத்த தீஸ்ஸ மன்னனும், பிற்காலத்தில் இரண்டாம் அக்போ, கல்லாட நாடன், முதலாம் பராக்கிரமபாகு, லஞ்சதிஸ்ஸன், நிஸங்கமல்லன், மகாதாடிக, மகாநாக ஆகியோர் இதனைப் புனர்நிர்மாணம் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

ஜே.கருஷ்னா,
கார்மேல் பற்றிமா தே.பாட., கல்முனை.

# நாணலின் பணிவு!



ஒருமுறை கடல், ஆறுகள்மூலம் தன்னிடம் என்னென்ன மரங்கள் வந்து சேர்கின்றன என்பதை அவதானித்துக்கொண்டிருந்தது. "இந்த ஆறுகள் பெருக்கெடுத்து வரும்போது, அனைத்து வகையான மரங்கள், செடிகள், கொடிகள், புற்கள் போன்றவற்றை என்வசம் இழுத்து வருகின்றன. ஏன் பெரிய பெரிய ஆலமரங்களும், அரச மரங்களும்கூட வெள்ளப்பெருக்கில் தப்பிப்பதில்லை. ஆனால், இதுவரை எந்த ஆறும் நாணல் புற்களை என்னிடம் கொண்டு வந்ததே இல்லை. என்ன காரணமாக இருக்கும்?" என்று சிந்தித்தது.

எனினும், அதனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. இதனால், அனைத்து ஆறுகளையும் தன் அருகில் அழைத்து கடல் விசாரித்தது.




"நீங்கள் அனைத்து வகையான மரங்கள், செடி கொடிகள், புற்களையும் இழுத்து வந்து என்னிடம் சேர்க்கிறீர்கள். அவற்றில் நாணல் புற்களை மட்டும் நான் பார்த்ததே இல்லை. அந்தப் புற்கள் மிகவும் சிறியவை. உங்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. நிலைமை இப்படி இருக்க நீங்கள் ஏன் அவற்றை என்னிடம் கொண்டு வருவதில்லை? அவை உங்களுக்கு ஏதேனும் உதவிகள் செய்துள்ளனவா? அதற்கு நன்றியாக நீங்கள் அவற்றைப் பிடுங்குவதில்லையா? காரணம் தெரிந்துகொள்ளவே உங்களை அழைத்தேன்!" என்றது.

அதற்கு கங்கை ஆறு, "கடல் அரசே! நாங்கள் இழுத்து வந்த மரங்கள், செடிகொடிகள், புற்கள் அனைத்தும் தற்பெருமை கொண்டவை. தங்கள் வலிமையால் எங்களை எதிர்த்து நின்றவை. அதனால், அவற்றை வேரோடு பிடுங்கி இழுத்து வந்தோம். ஆனால், நாணல் புற்களோ நாங்கள் பெருக்கெடுத்து வருவதைப்பார்த்ததும், எங்களைப் பணிவாக வணங்குகின்றன. பின்னர் தலை நிமிர்ந்து நிற்கின்றன. பணிவுடையவர்கள் என்றும் அழிவதில்லை; அவமானப்படுவதும் இல்லை. இது தங்களுக்குத் தெரியாதா?" என்றது.

"ஆம் நீ கூறுவது சரி. பணிவுடையவர்களை யாராலும் அழிக்கமுடியாது! என்பது உண்மைதான்" என்றது கடல்.

# ஆசிரிய பெருந்தகைகளே!




அறிவுக்கண் திறந்திடுவாய்
மாணவ முதற்கண்ணாய்!

புன்னகையுடன் பேசுவாய்
எம்மை வளர்த்த அன்னையாய்!

அன்னை போல் அன்பை
ஊட்டிடுவாய்
எம் கண்கண்ட தெய்வமாய்!

சக விடயங்களை பகிர்ந்திடுவாய்
உயிருக்கும் மேலான நண்பனாய்!

வையகம் வாழ்ந்திடவே - நீ
எமக்கு அறிவை ஊட்டிடுவாய்!

வையகம் போற்றிடவே
ஊரார் எம்மை வாழ்த்திடவே

எமக்கு அறிவைப் புகட்டிய ஆசிரிய
பெருந்தகைகளை
வாழ்த்திடுவோம் வாழ்த்திடுவோம்
என்றென்றும் வாழ்த்திடுவோம்!

த.கார்த்தீபன்,
உடுப்பிட்டி அ.மி.கல்.,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை இஸ்லாமிய மாணவர் அமைப்பின் கம்மல்துறை கிளையினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மே.மா.சபை உறுப்பினர் ஷாபி ரஹீம் அழைத்துவரப்படுவதையும் மாணவர்கள் வரவேற்பு கீதமிசைப்பதையும் படத்தில் காணலாம்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



ஏறாவூர்-03 ஐச் சேர்ந்த அன்ஸார்-றிபாயா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அஸ்ரா, 02.01.2013 இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.




மட்டக்களப்பு கல்லடி உப்போடையைச் சேர்ந்த சாந்தலிங்கம்-சாந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வர்களான சங்கீர்த் துசாந், தனது ஏழாவது பிறந்தநாளை 27.12.2012 அன்று கொண்டாடினார்கள். இவர்களை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கல்லடி பேச்சியம்பாளின் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஹருஸ்ராஜ்)



பேராலை பளையை சேர்ந்த கௌரீசன்-சிவலதா தம்பதியரின் செல்வப் புதல்வி பிறையினி, தனது ஆறாவது பிறந்தநாளை 21.12.2012 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல கலைகளையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

# கண்டிக்கால கலைப்படைப்புக்கள்

ஓவியம் வரைவோம் - 135

செங்கடகலயை (கண்டி) தலைநகராகக் கொண்டு 16 ஆம் நூற்றாண்டு முதல் மலையகம், சப்ரகமுவ, தென்பகுதிகளில் நிலவிய ஆட்சிக்காலத்தில் பல்வேறு கலைப் படைப்புகள் உருவாகின. குகைச் சுவர்களை பதப்படுத்தியும் துணிகளிலும் வரையப்பட்ட ஓவியங்களை தம்புள்ள, தெகல்தொருவ, பம்பரகல, ஹிந்தகலபோன்ற இடங்களில் காணலாம். கட்டடங்களில் காணப்படும் ஓவியங்களுக்கு சிறந்த உதாரணமாக இருப்பது தலதா மாளிகையில் காணப்படும் கலைப்படைப்புகளாகும்.



தெகல்தொருவ சுவரோவியம்



தலதா மாளிகை சுவரோவியங்கள்

## கண்டிக்கால கலைப்படைப்புகளின் பிரதான பண்புகள்

கண்டிக்கால ஓவியங்கள் தொடர்ச்சியான ஜாதகக் கதைகளின் காட்சிகளை அடிப்படையாக்கொண்டு வரையப்பட்டன. மனித உருவங்களை வரையும் போது வரையறைகளை பின்பற்றி வரைந்துள்ளனர். தூரத்தில் தெரியும் உருவங்கள், இருட்டில் தெரியும் உருவங்கள் என்பவற்றுடன், மங்கலான ஒளியில் தெரியும் உருவங்கள், பிரகாசமான ஒளியில் தெரியும் உருவங்கள், உருவங்களை வட்ட மிட்டுக் காட்டல், நிறங்களை ஏற்றவாறு அமைத்தல் போன்ற வேறுபாடுகளையும் கண்டிக்கால ஓவியங்களில் காணலாம்.

கண்டிக்கால ஓவியங்கள் பெரும்பாலும் ரேகைகளைப் பயன்படுத்தியே வரையப்பட்டுள்ளன. ஒருபக்கத்தை மட்டும் நிறம்தீட்டுதல் அல்லது ஒரு பக்கம் மட்டும் தெளிவாகத் தெரியும்படி வரைதல் என்பன இக்கால ஓவியங்களின் பண்புகளில் ஒன்றாகும். அத்துடன், இந்த ஓவியங்கள் தொடர்ச்சியான கதை அமைப்புடன் உயிர்த்துடிப்புள்ளதாக வரையப்பட்டுள்ளன. பின்புலக் காட்சிகளுக்கு கூடுதலாகச் சிவப்பு நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெளிப்புற ரேகைகள் கறுப்பு நிறத்தால் வரையப்பட்டுள்ளன. மனித உருவங்களை வரையும்போது கண்கள் திறந்தவாறு காணப்படும். பின்புலக்காட்சிகளில் பலவகையான மலர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேறுபட்ட பாத்திரங்களுக்கு பொருத்தமான நிறங்கள் கையாளப்பட்டுள்ளன. உதாரணமாக தெய்வ உருவம் - வெள்ளை, புத்தர் உருவம் - மஞ்சள், பேய்கள் - கறுப்பு, மரங்கள் - பச்சை போன்ற நிறங்களை பயன்படுத்தியுள்ளனர்.






எம்.மில்ஹான்,
அல்-பதுரியா மத்.கல்.,
பாணந்துறை.



சி.கம்ஷாயினி,
தமிழ்ச்சங்கம் பாலர் பாட.,
வெள்ளவத்தை.



எச்.கிருஷிகன்,
யாழ்.இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.



எம்.பர்ஹான்,
அல்-தாஸ்ஸார் கல்., கொழும்பு.



எஃப்.அஸ்ரா,
அல்-அதீக் மு.ம.வித்.,
கொடியாகும்புரை.



சு.டிலாணி,
பாரதி ம.வித்., தலவாக்கலை.



எஃப்.சுஹைனா,
பதுரியா மத்திய கல்.,
மாவனல்லை.



ச.உதயசூரியா,
மூளாய் சைவப்பிரகாச வித்.,
பொன்னாலை.



ஜெ.டன்சன்,
ஆலங்குளம், மன்னார்.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிம்சாவாதத்தின் தந்தை

# மகாத்மா காந்தி





'பழிக்குப் பழி என்ற கோட்பாட்டின் பிரதிபலன் முழு உலகமும் குருட்டு உலகமாகி விடுதலேயாகும்'

## மகாத்மா காந்தியின் வகிபாத்திரங்கள்

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடி நபராக விளங்கிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தனது வாழ்நாளில் மேற்கொண்டிருந்த அனைத்துவிதமான போராட்டங்களும் அகிம்சையை பிரதானமாகக் கொண்டிருந்தன. இதனால் அவர் இந்தியாவில் மட்டுமன்றி, உலகின் முக்கிய அரசியல் தலைவர்களுக்கும் உதாரணபுருஷராகத் திகழ்ந்தார். இன்றைய நவீன கால உலகிலும் அகிம்சாவாதத்தின் பிரதிபிம்பமாக 'மகாத்மா காந்தியே' திகழ்கின்றார். இதற்கமைய, ஐ.நா. அமைப்பினால் 2007 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் 2 ஆம் திகதிவரை 'உலக அகிம்சாவாதி தினம்' பிரகடனப்படுத்தப்பட்டது. கரம்சந்த் காந்திக்கும் புத்லிபாய் காந்திக்கும் மகனாகப் பிறந்த காந்தி தனது 14 ஆவது வயதில் (1883) திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார். அவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அகிம்சாவாதத்தை உலகுக்குப் புகட்டிய இவர், 1948 ஜனவரி 30 ஆம் திகதி இந்து அடிப்படைவாதி ஒருவரது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### 1869

ஒக்டோபர் 2 ஆம் திகதி மும்பை நகரத்தின் போர்பந்தர் என்ற இடத்தில் பிறந்தார்.

### 1888

திருமணத்தின் பின்னர் சட்டக்கல்விக்காக லண்டன் பயணமானார். கல்வியை முடித்துக்கொண்டு 1891 இல் மீண்டும் இந்தியா திரும்பினார்.

### 1893

இரண்டு ஆண்டுகளின் பின்னர் இந்திய சட்ட நிறுவனங்களில் ஒன்றான Dada Abdulla & Co. என்ற நிறுவனத்தில் இணைந்து தொழில் ரீதியாக தென்னாபிரிக்காவுக்குப் பயணமானார். அங்கு 21 ஆண்டுகள் சேவை புரிந்த இவர், அங்கு இந்தியர்கள் எதிர்கொள்ளும் இம்சைகள் மற்றும் துன்புறுத்தல்கள் குறித்து தனது எதிர்ப்புக்களை வெளிக்காட்டி வந்தார். அரசியல் கட்சி ஒன்றினையும் ஸ்தாபித்தார். இதனால் பல பிரச்சினைகளை அவர் எதிர்கொண்டதுடன், சிறைவாசத்தையும் அனுபவித்தார்.

### 1906

செப்டெம்பர் 11ஆம் திகதி தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ் பேர்க் நகரில் தனது முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டத்தினை ஆரம்பித்தார்.



### 1915

மீண்டும் இந்தியாவிற்கு வந்த அவர், தேசிய தலைவர்களில் ஒருவராக மக்கள் மத்தியில் பெரும் புகழை ஈட்டிக்கொண்டார். அடுத்த நான்காண்டுகளில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான நபர்களுள் பிரபல்யம் பெற்றவரானார்.

### 1921

இந்திய தேசிய கொங்ரஸின் தலைவரானார். அதில் அரசியல் அமைப்பு மாற்றங்களை முன்னெடுத்தார். இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு உற்பத்திகள் தொடர்பில் அமைதியான எதிர்ப்புணர்வினைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தார். 'உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கும்' கருத்தினையும் முன்வைத்தார்.






### 1922

பிரித்தானியா ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டதன் காரணமாக, ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். எனினும், இரண்டு ஆண்டுகளில் விடுதலை கிடைத்தது. அரசியலில் இருந்து விலகி, பிளவுபட்டிருந்த இந்து, முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுத்தார்.

டைம் சஞ்சிகையினால் Man of the Year என்ற புகழாரத்தினை 1930 இல் காந்தி பெற்றார். 1999 இல் Person of the Century என்ற தெரிவில் காந்திக்கு இரண்டாம் [illegible] கிடைத்தது.



### 1930

பிரித்தானிய அரசாங்கம் உப்புக்காக அறவிட்ட வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மார்ச் மாதம் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை ஆரம்பித்தார். காந்தி உட்பட, ஆர்ப்பாட்டக்காரர்கள் அகமதாபாத்திலிருந்து 'தன்தி' கடற்கரைவரை 388 கி.மீற்றர் தூரம் நடைபயணத்தை மேற்கொண்டனர். உள்நாட்டு உப்பு உற்பத்தி தொடர்பாக, மக்களை அறிவுறுத்தும் முகமாக இந்த நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது. இது 'dandi march' என்ற பெயரில் பிரபல்யம் பெற்றது.

### 1931

லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள காந்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த காலப்பகுதியில் பிரித்தானியர் ஆட்சியினால் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்தும் பேச்சுவார்த்தைகள் இங்கு நடைபெற்றன. அரசியல் கைதிகளை விடுவிக்கவும் பிரித்தானிய நிர்வாகம் இணக்கம் தெரிவித்திருந்தது.



### 1934

இந்திய தேசிய கொங்ரஸிலிருந்து ராஜினாமா செய்தார். அந்த இடத்திற்கு நேரு தெரிவானார்.

### 1936

மீண்டும் அரசியலுக்கு வந்தார். இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைப்பதற்காக, பிரித்தானியாவை அறிவுறுத்தும் முகமாக 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தினை அடிப்படையாகக் கொண்டு பல ஆண்டுகள் போராடினார்.

### 1942

ஆகஸ்ட் 9 ஆம் திகதி காந்தி உட்பட, கட்சியின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர். 1944 மே 6 ஆம் திகதி வரை அவர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும் போது, மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டார்.



இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் காந்தியைக் [illegible]

### 1946

இந்திய-பாகிஸ்தான் நாடுகளைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அடுத்து ஏற்பட்ட கலவரங்களை அடக்கி இந்து-முஸ்லிம் மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தார்.

[illegible] 1982 [illegible]




[illegible]



(-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அப்பா-கமல்- தம்பி-மாமி ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்

**මල්ලි:** **අම්මේ! මාමා ඇවිත්.**
அம்மே! மாமா எவித்.
தம்பி: **அம்மா! மாமா வந்திருக்கிறார்.**

**නැන්දා:** **ආ.. එන්න අයියේ. කමල් පුතා, තාත්තා ඇවිත්.**
ஆ... என்ன அய்யே. கமல் புதா, தாத்தா எவித்.
மாமி: **ஆ... வாருங்கள் அண்ணா. மகன் கமல், அப்பா வந்துவிட்டார்.**

**කමල්:** **තාත්තේ ඔයා විතරද ආවේ?**
தாத்தே ஒயா விதரத ஆவே?
கமல்: **அப்பா நீங்கள் மட்டுமா வந்தீர்கள்?**

**තාත්තා:** **ඔව් පුතේ. ඔයා ලෑස්තිද?**
ஒவ் புதே. ஒயா லேஸ்தித?
அப்பா: **ஆம் மகன். நீங்கள் ஆயத்தமா?**

**කමල්:** **ඔව් තාත්තේ, මම ලෑස්තියි.**
ஒவ் தாத்தே. மம லேஸ்திய்.
கமல்: **ஆம் அப்பா, நான் ஆயத்தமாகிவிட்டேன்.**

**මල්ලි:** **මාමේ, මම අද ඔයාලගේ ගෙදර එනවා.**
மாமே, மம அத ஒயாலகே கெதற எனவா.
தம்பி: **மாமா, இன்று நானும் உங்கள் வீட்டிற்கு வருவேன்.**

**තාත්තා:** **යමු පුතා. නිවාඩු කාලේ තියෙන්නේ හොඳට සෙල්ලම් කරන්නනේ.**
யமு புதா. நிவாடு காலே தியென்னே ஹொந்தட்ட செல்லம் கறன்னனே.
அப்பா: **போவோம் மகன். விடுமுறைக் காலம் இருப்பது நன்றாக விளையாடத்தானே.**

**කමල්:** **මල්ලි අපි යමුද?**
மல்லி அப்பி யமுத?
கமல்: **தம்பி நாங்கள் போவோமா?**

**තාත්තා:** **නංගි අපි ගිහින් එන්නම්.**
நங்கி அப்பி கிஹின் என்னம்.
அப்பா: **தங்கச்சி நாங்கள் போய் வருகிறோம்.**

**කමල්:** **නැන්දේ! මම ගිහින් එන්නම්.**
நெந்தே! மம கிஹின் என்னம்.
கமல்: **மாமி! நான் போய் வருகிறேன்.**


ஆங்கிலம் கற்க வேண்டுமா ? இதோ.....

**60 நாட்கள் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்**

அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்குமென விசேடமாக தயாரிக்கப்பட்ட

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH . COURSE



பாடநெறியை தொடரும் உங்களுக்கு

அழகிய டீ சேட் T.SHIRT ஒன்றும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவது எப்படி பயிற்சி புத்தகம் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.

**2013ம் ஆண்டுக்கான தினக்குறிப்பேடு DAIRY ஒன்று இலவசம்.**



* *60* நாட்கள் முடிவில் சரளமான ஆங்கில அறிவுடன் அங்கிகாரம் பெற்ற *DIPLOMA IN ENGLISH* சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

* வயது கட்டுப்பாடோ.ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. தமிழ் எழுத. வாசிக்க தெரிந்திருந்தால் போதுமானது.

மேலதிக விபரங்களை பெற பெயர். முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SMS செய்யுங்கள்

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002





## நிகழ்கால வினைமுற்று வாக்கியம்
## Present Perfect Tense

* மேலும் உதாரணங்களை இங்கே பார்ப்போம்.

(அ) நான் உன்னை எங்கேயோ பார்த்துள்ளேன்.
I have seen you <u>somewhere</u>.

* I have seen.
நான் பார்த்துள்ளேன்.
(நான் பார்த்திருக்கின்றேன்)

(ஆ) நீ அந்த வீட்டை இரண்டு தடவைகள் பார்த்துள்ளாய்.
You have seen that house twice.

* You have seen.
நீ பார்த்துள்ளாய்.
(நீ பார்த்திருக்கின்றாய்)

(இ) நாங்கள் பல காட்சிகளைக் கண்டுள்ளோம்.
We have seen several views.

* We have seen.
நாங்கள் பார்த்துள்ளோம்.
(நாங்கள் பார்த்திருக்கின்றோம்)

(ஈ) அவர்கள் அந்த இடங்களை ஏற்கனவே பார்த்துள்ளார்கள்.
They have already seen the places.

* They have seen.
அவர்கள் பார்த்துள்ளார்கள்.
(அவர்கள் பார்த்திருக்கின்றார்கள்)

(உ) அவன் என்னை எங்கேயோ பார்த்துள்ளான்.
He has seen me <u>somewhere</u>.

* He has seen.
அவன் பார்த்துள்ளான்.
(அவன் பார்த்திருக்கின்றான்)

(எ) அவள் அந்த நபரை இரண்டு தடவைகள் பார்த்துள்ளாள்.
She has seen that person twice.

* She has seen.
அவள் பார்த்துள்ளாள்.
(அவள் பார்த்திருக்கின்றாள்)

(ஏ) It has seen the rat.
அது அந்த எலியைக் கண்டுவிட்டது.

* It has seen.
அது கண்டுவிட்டது.
(அது பார்த்துவிட்டது)

(ஐ) The dog has seen the rat.
அந்த நாய் அந்த எலியைக் கண்டுவிட்டது.

* The dog has seen.
அந்த நாய் கண்டுவிட்டது.
(அந்த நாய் பார்த்துவிட்டது)

(ஒ) கள்வன் பொலிஸாரைக் கண்டுவிட்டான்.
The thief has seen the policemen.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் சீகிரியாவை ஒத்த மலேசியாவின் ப(ட்)டுக்கேவ்

## ப(ட்)டுக்கேவில் ஓவியங்கள் கிடையாது



குகை அடிவாரத்திடலில் வந்திறங்கியதும், நடுத்தர வயதான ஒரு பெண்மணி பக்திப் பரவசத்துடன் பிரசாதத்தை நீட்டியதானது என்னை வியப்பிலாழ்த்திவிட்டது. நன்றிப் புன்னகையுடன் அதனை வாங்கிக்கொண்டு படிகளில் ஏறத்தொடங்கினேன். 272 படிகள். ஒவ்வொன்றாக ஏறி முடிப்பதற்குள் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கத் தொடங்கிவிட்டது. அரைப் பகுதி வரை சென்று சற்று ஓய்வெடுத்துக் கொண்ட பின்னர், மறுபடியும் ஏறி, குகையை அடைந்தேன்.

ப(ட்)டுகேவ் கோலாலம்பூரிலிருந்து 13 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. ஆசியாவிலேயே இந்துக்கள் அதிகம் வாழ்கின்ற இஸ்லாமிய நாடு மலேசியாவாகும். இந்துக்கள் இவ்விடத்தைப்





புனிதத்தலமாக மதித்து நேர்த்திக் கடன்களோடு இங்கு வருகின்றனர். ஏனையோர் இங்குள்ள இயற்கையின் அழகை, ரசித்து களிப்படை



கின்றனர். அங்கு திரண்டு வந்திருந்த உல்லாசப் பயணிகளைக்கொண்டு இவற்றை அறிந்துகொள்ள முடிந்தது.

1892 ஆம் ஆண்டளவில் அடர்ந்த காட்டுப்பகுதியில் இருந்து இந்த சுண்ணாம்புக்கல் குகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்குகைத் தொகுதியைக் கண்டுபிடித்து, அதன் ஆரம்ப நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தவராகக் கருதப்படுவர் தம்புசாமிப்பிள்ளை என்பவராவார். இவரது சிலையொன்று குகையின் அடிவாரத்தில் தற்போதும் காணப்படுவது சிறப்பம்சமாகும். தம்புசாமிப்பிள்ளை அவர்களுக்கு உறுதுணையாகவும், உதவியாகவும் இருந்து ஆரம்பகாலப் பணிகளில் ஈடுபட்டவர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர் கோபாலப்பிள்ளை என்பவராவார்.இவர் இக்குகை அமைந்துள்ள பகுதியைச் சீர்செய்து, யாத்ரீகர் வந்து போவதற்காக வழியமைத்தவர் என்று எனது பயண வழிகாட்டி பத்மநாதன் கூறி அறிந்து கொண்டேன். அக்காலத்தில் கோபாலப்பிள்ளை அவர்கள் வீதி நிர்மாணப்பணியில் ஈடுபட்டிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உலகில் உயரமான முருகன் சிலை

தங்கக் கலரில் ஜொலிக்கும் உலகிலேயே மிக உயரமான முருகன் சிலையொன்று இக்குகையின் அடிவாரத்தில் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. இச்சிலை 2006 ஜனவரி 29 இல் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 141 அடிகளாகும். இச்சிலை நிர்மாணிப்புக்கென சுமார் 670 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. ஸ்ரீபாலசுப்ரமணிய ஆலயத்தின் அடிவாரத்தில் இந்த முருகன் சிலை காணப்படுகின்றது. தவிர, இப்பிரதேசத்தில் குகையின் அடிவாரத்திலும், குகைக்குள்ளும் பல வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு தைப்பூசத் திருவிழா வருடம்தோறும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது. பிரதி வருடமும் தை மாதத்தில் நடைபெற்றுவரும் இத்திருவிழாவுக்கு கிட்டத்தட்ட எட்டு லட்சம் பக்தர்கள் வருகை தருவதாகக் கூறப்படுகின்றது. இத்திருவிழாவின்போது, கோலாலம்பூரில் அமைந்துள்ள மாரியம்மன் கோவிலிலிருந்து புறப்படும் தேர்பவனி ப(ட்)டுக்கேவ் வரை ஆடல், பாடல், கொட்டு முழக்கங்களுடன் பக்தர்கள் வீதி வலம் வருவதாகவும், காவடியாட்டம், பால்குடம் தாங்கிய பெண்களும் நடனங்கள் போன்றனவும் இவ்வீதி ஊர்வலத்தின்போது நிகழ்வதாகவும் வழிகாட்டி பத்மநாதன் கூறினார்.

வருடம் முழுவதும் தினமும் பக்தர்களும், உல்லாசப்பயணிகளும் அதிகளவில் வந்துபோகும் இடமாக ப(ட்)டுகேவ் காணப்படுகின்றது. பரந்து விரிந்து காணப்படும் அடிவாரத்திடலில் புறாக்கள் நிறைந்து காணப்படுவதோடு, படிகள் ஆரம்பிக்கின்ற இடம் முதல் குகையைச் சுற்றியும், குகைக்குள்ளும் மற்றும் அனைத்துப் பகுதிகளிலும் ஆங்காங்கே அலைந்து திரிகின்ற குரங்குகளையும் காண முடிந்தது. (தொடரும்)

# 2012, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



மா/அப்துல் ஹமீட் மு.வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.ஆக்கில் அஹமட், 172 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரில்வான்-பெறோஜ் தம்பதியரின் புதல்வராவார்.



தல்கஸ்பிடிய, அல்-அஷ்ரக் ம.வித்தியாலய மாணவி எஃப்.ரிபாதா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸ்வர்-ரசீனா தம்பதியரின் புதல்வியாவார்.



மீராவோடை, அல்-ஹிதாயா மகா வித்தியாலய மாணவி ஏ.எல்.எஃப்.றிஹா, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆதம்லெப்பை-பாயிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



மே/மா/மது டெல்கித் த.வித்தியாலய மாணவி சந்துனி கல்பனா, 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சிவா-லலிதா தம்பதியரின் புதல்வியாவார்.



கம்பளை, சாஹிரா தே.பாடசாலை மாணவனான எம். அஸிப், 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மிக்தாத்-இஷானா தம்பதியரின் புதல்வராவார்.



நாவலப்பிட்டி கனிஷ்ட பாலிகா வித்தியாலய மாணவி பாத்திமா அஸ்ரா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரௌப்-ஜாஹிரா உம்மா தம்பதியரின் புதல்வியாவார்.



கல்முனை கார்மேல் பற்றிமா தே.பாடசாலை மாணவியான அப்ரோஜ் நதா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஐயூப்கான், தஸ்பிஹா தம்பதியரின் புதல்வியாவார்.



நாவலப்பிட்டி கனிஷ்ட பாலிகா வித்தியாலய மாணவி ஆர்.சர்மதா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரவிந்திரன்-கிருஷ்ணவேணி தம்பதியரின் புதல்வியாவார்.



யா/குப்பிளான் வி.ம.வித்தியாலய மாணவன் பி.றொமேஸ், 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பிரேமராசா-சுனித்தா தம்பதியரின் புதல்வராவார்.



தல்கஸ்பிடிய, அல்-அஷ்ரக் ம.வித்தியாலய மாணவி என்.அஸ்பா, 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நசீர்தீன்-பர்சானா தம்பதியரின் புதல்வியாவார்.



தல்கஸ்பிடிய, அல்-அஷ்ரக் ம.வித்தியாலய மாணவி எஸ்.சாம்மா, 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சாஜஹான்-அமீனா தம்பதியரின் புதல்வியாவார்.



தல்கஸ்பிடிய, அல்-அஷ்ரக் ம.வித்தியாலய மாணவன் ஹாத்தீம், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹிஸ்புர்ரஃமான்-நுஹாரா தம்பதியரின் புதல்வராவார்.

மமா/தெநு/தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியில் சித்தியடைந்த மாணவர்களின் விபரம்;


ஏ.எம். அப்ரான் - 172


எஃப். மபாஸா - 162


எஃப். மின்ஹா - 160



எஃப். பாஹிமா - 153



எம். ஆகிப் 151


எஃப்.ராசிகா 149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்தமான கட்டத்தை வெட்டி ஒட்டுக 1





## அறிவுக்கு விருந்து - 395 விடைகள்

**போட்டி: 01**

1. குறிஞ்சி 2. முல்லை 3. பாலை
4. மருதம் 5. நெய்தல்

**போட்டி: 02**

1. M 2. XXX 3. XC

**போட்டி: 04** **போட்டி: 05**










தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.01.09 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 398
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## இணைக்க 3

| | | | |
|---|---|---|---|
| spider |  | purple | |
| ear | | train | |
| ball | | bear | |
| badge | | lamp | |
| whale | | parrot | |
| hand | | table | |
| run | | ant | |
| bed | | leaf | |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 395 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**

வி.தேவசேனா, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**போட்டி: 02**

எம்.சர்பான், எழுவில, பாணந்துறை.

**போட்டி: 03**

எஃப்.ஷஹாமா, ஜயந்தி மாவ., அநுராதபுரம்.

**போட்டி: 04**

சி.லக்ஷ்மன், வெண்டவர்ட் இடம், தெஹிவளை.


**போட்டி: 05**

றைனா தஹறப், மருதமுனை - 02, கல்முனை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ஆர்.சபேஷன், பசறை.
- அம்னா மஹ்ரூப், நம்புக்கந்தன.
- ஐ.அமிர்தனா, கிளிநொச்சி.
- எஃப்.மிஹாதா, மல்வானை.
- எம்.சமீர், படுவத்த.
- த. பிரவீனா, சாவகச்சேரி.
- ஆர்.துஸ்யந்தி, கொழுவாவில.
- எஃப்.இல்மா, கட்டுகொட.
- க.ஹரன், மட்டக்குளி.

## 4



**(A)**

**எத்தனை உள்ளன?**

- செவ்வகங்கள் எத்தனை?
- வட்டங்கள் எத்தனை?
- முக்கோணிகள் எத்தனை?

□_ ○_ △_

**(B)**

ஒத்தகருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக

1. ஈ - ..............................

(நுளம்பு/ இலையான்)

2. அபாயம் - ......................

(ஆபத்து/எச்சரிக்கை)

3. ஒப்பந்தம் - ....................

(சம்மதம்/ உடன்படிக்கை)

4. வெட்கம் - ......................

(நாணல்/நாணம்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல.14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | |
| 4 | | ■ | 5 | | ■ |
| | ■ | 6 | | | |
| | ■ | ■ | ■ | | ■ |
| ■ | 7 | | ■ | ■ | 8 |
| 9 | 10 | 11 | | ■ | |

### மேலிருந்து கீழ்

01. தாமரை
02. மீன் பிடிக்க உதவும்
03. கள்வன்.
05. உடல் உறுப்புகளில் ஒன்று.
08. இரவு.
10. இசையை ஈடுபாட்டுடன் கேட்டல் (தலைகீழ்)
11. நிலம் (தலைகீழ்).

### இடமிருந்து வலம்

01. மனவருத்தம் என்றும் அர்த்தப்படும்.
03. இறந்தவர்களுக்கு செய்வது.
04. புவி மேற்பரப்பில் உயரமாக அமைந்துள்ள புவியியல் தொகுதி.
05. கதை/கவிதையின் மூலக்கருத்து என்றும் சொல்லலாம்.
06. புவி நிலப்பரப்பு இவ்வாறு ஏழாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
07. (தலைமுடியை) மழித்தல்.
09. இந்தியாவை இப்படியும் அழைப்பர்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.13 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கே | ச | ரி | ■ | 2 பா | 3 கு |
| ப் | ■ | 4 வ | தி | ■ | ம் |
| பை | ■ | ■ | 5 ஞ | ந் | 6 பி |
| ■ | 7 த | ன் | ■ | ■ | டு |
| 8 வெ | ங் | கா | ய | ம் | ■ |
| டி | கு | 9 ம | ■ | 10 ஆ | டை |

## சரியான சொல்லில் கோடிடுக 5

1. வருமை/ வறுமை/ வறும்மை
2. வள்ளல்/ வல்லள்/ வல்ளல்
3. சமயல்லறை/ சமயலறை/சமையலறை
4. தினசரி/தினசறி/தினசிரி
5. வின்வெளி/ விண்வெலி/ விண்வெளி

## தரவுகளுக்கு ஏற்ப உரிய கட்டத்தில் X அடையாளமிடுக 2

1) ஐந்து உருக்கள்

2) மூன்று உருக்கள்

3) நான்கு உருக்கள்

4) இரண்டு உருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய ஆண்டில் உறுதி பூணுவோம்...!



பலரும் புத்தாண்டில் திட்டமிட்ட குறிக்கோள்களின் அடிப்படையில் சாரணிய அபிவிருத்தியை அடைவதே சாரணர்களாகிய எமது லட்சியமாக இருக்க வேண்டும். இதற்காக குழு மட்டத்திலிருந்து சகல பிரிவுகளின் கூட்டு முயற்சிகள் ஊடாக, சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திய நிகழ்ச்சித்திட்டமொன்று இருத்தல் வேண்டும். அதற்காக அர்ப்பணிப்பு மிக்க தலைமைத்துவமும் இருத்தல் வேண்டும். அவர்கள் அனைவரும் தமக்குரிய பணியை தமக்கு இயன்றளவில் நிறைவேற்றத்தக்கதான சூழலை நட்புடனும் ஒத்துழைப்புடனும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறான சூழலை மேலும் மெருகூட்டுவதன்மூலமாக, 2013 ஆம் ஆண்டில் சாரணக் குறிக்கோள்களை அடைவதற்கு எடுக்கப்படும் செயற்பாடுகள் அனைத்தும் சுலபமடையச் செய்வது நிச்சயம். இவ்வெற்றியின் இறுதிப் பலன் யாதெனில் சாரண இயக்கத்திற்கு இலங்கையின் சிறுவர், சிறுமிகள் அதிகளவில் சேர்வதற்கும் மற்றும் அவர்களின் வாழ்க்கை முறையில் நல்வழிப்படுத்துவதற்கான பாதைகள் திறக்கப்படுதலுமே யாகும். புதிய வருடத்தில் இதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற உறுதி பூணுவோமாக.




## புதிதாக சிந்திப்போம்

நாம் வாழும் இன்றைய உலகம் சமூகங்களுக்கிடையே சமத்துவமின்மை, சகிப்புத்தன்மை இன்மை, மனஸ்தாபங்களால் மூளும் சர்ச்சைகள், சீரற்ற வாழ்க்கை முறைமை, சுற்றுச்சூழலை அழிப்பதனூடாக ஏற்படும் சூழல் சமனற்ற தன்மை ஆகியனவற்றால் அழிவுப்பாதையை நோக்கிச் செல்கின்றது.

உலகின் குடிமக்களான எமக்கு ஒரு கடமை உணர்வு உள்ளது. அதற்கமைவாக, சாரணர்களான எமது கடமை சிறந்ததொரு உலகை உருவாக்குதலாகும்.



சகலருக்கும் பொதுவான இச்சத்தியப் பிரமாணத்தை எடுப்பதன்மூலம் அனைத்தும் மிக இனிதே நடைபெறும் எனும் கொள்கையை திடநம்பிக்கையுடன் ஏற்படுத்திக்கொள்வோம்.

சகலரையும் சகோதர, சகோதரிகளாக, நல்ல நண்பர்களாக அவர்கள் எத்தரப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அனைவருடனும் ஒன்றுகூடி புதிய சக்தியுடன் ஒற்றுமையை உருவாக்குவோம். புதியதோர் உலகை உருவாக்குவதில் பங்காளிகளாவோம்.

## சாரண இயக்கம் என்றால் என்ன?



1. சாரண இயக்கம் என்பது தன்னார்வம் கொண்டதும், சுயலாப நோக்கமற்ற, எந்தவித அரசியல் சார்பற்ற ஓர் இயக்கமாகும். இந்த இயக்கத்தின் உறுப்பினர்களை ஒரு நாட்டின் சிறந்த குடிமகனாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.



2. சாரண இயக்கம் ஒரு மனிதனை சிறந்த குடிமகனாக்குகின்றது. இந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இணையும் அனைவரும் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழியே தன் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமையை செவ்வனே செய்வேன் என்பதும் பிறருக்குத் தன்னால் இயன்றவரை உதவி செய்வேன் என்பதுமேயாகும். இந்த இயக்கத்தில் ஒவ்வொரு சாரணனுக்கும் சிறந்த குடிமகனாவதற்கான சகல நற்பண்புகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது.



3. சாரண இயக்கத்தின் தந்தை பேடன் பவல் அவர்கள் எழுதிய Rovering to Success என்ற நூலில், 'சாரண இயக்கமே வாழ்க்கை அல்ல; சாரண இயக்கம் உன் வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த வழி' என்று கூறியுள்ளார். சாரண இயக்கத்தில் உள்ள அனைத்து செயற்பாடுகளுமே மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

4. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உள்ளது. அது இந்தப் பூமியில் நீங்கள் வாழ்வதற்கான வாடகை, அந்த வாடகையை எந்தவொரு மிகப்பெரிய பணக்காரனாலும் கொடுக்க முடியாது. ஓர் ஏழையாலும் கொடுக்க முடியாது. பிறருக்கு உதவி புரிவதன் மூலம் மட்டுமே அதனை ஈடுசெய்ய முடியும். மற்றவருக்கு உதவி புரிய சாரண இயக்கம் ஒரு சிறந்த வழியாகும். எனவே, சாரண இயக்கத்தில் இணைந்து பல நல்ல உதவிகளை பிறருக்கு உங்களால் முடிந்தவரை செய்யுங்கள்.



தயாரிப்பு:
சாரணர் ஜெரம் டி சில்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மலை தினம்

International MOUNTAIN DAY

சர்வதேச மலை தினம் கடந்த டிசம்பர் 11 ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்த அனுஷ்டிப்புத் தினமானது, ஐக்கிய நாடுகள் சபையினால் 2003 ஆம் ஆண்டிலேயே பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி சர்வதேச மலை தினம் தொடர்ச்சியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இம்முறை 'மலையும் வனாந்தரமும்' என்ற தொனிப்பொருளின்கீழ் 'சர்வதேச மலை தினம்' அனுஷ்டிக்கப்பட்டது.

## மலை மற்றும் வனாந்தரம்

மலைக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கப்படுவதன் நோக்கம் அதனைச் சார்ந்த காடுகளேயாகும். மலை சார்ந்த காடுகள் இயற்கைக்கு மிக உன்னதமான பயனை அளிக்கின்றன. இயற்கை நலன் சார்ந்த விடயங்களுக்கு இது இன்றியமையாத ஒன்றாகும். உலக சனத்தொகையில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான நீரை இந்த மலை சார்ந்த காடுகளே வழங்குகின்றன. அத்துடன், இந்த வனாந்தரப் பகுதிகள் பெருமளவிலான விலங்குகளின் உறைவிடமாகவும் இருந்து வருகின்றன.

விலங்குகளுக்கு மட்டுமன்றி, மனிதனுக்கும் நீர், உணவு, மரப்பொருட்கள் ஆகியனவற்றை பெற்றுக்கொள்வதற்கு இந்த மலை சார்ந்த காடுகள் பெருமளவில் உதவி செய்கின்ற அதேவேளை, இந்த காடுகள் இன்னொருபுறம் பாரியளவில் அழிவுகளுக்குட்பட்டும் வருகின்றன. இயற்கை சீற்றங்கள் ஒருபுறமிருக்க, மனிதனாலும் காடுகள் அழிவுகளுக்கு உட்பட்டு வருகின்றமையே, இன்று பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனாலேயே, இதன் பாரதூரத்தை மனிதனுக்கு உணர்த்தும் நோக்கில், 'மலையும் மலைசார்ந்த காடுகளும்' என்ற தொனிப்பொருளில் 'சர்வதேச மலை தினம்' அனுஷ்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நோக்கம்

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதத்தில் இத்தினம் அனுஷ்டிக்கப்படுவதன் பிரதான நோக்கம், மலை மற்றும் காடுகள் இயற்கைக்கு ஆற்றும் மாபெரும் சேவைகளை கருத்திற்கொண்டும் காலநிலை மாற்றங்களின்போது, அவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய தன்மையை அவை பெற்றுள்ளதனையும் மனிதர்களுக்கு உணர்த்தி, இத்தகைய இயற்கை சொத்தைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதுமேயாகும். மேற்படி அனுஷ்டிப்புத் தினத்தின்போது, உலகம் பூராகவும் பல்வேறு வகையிலான சிறப்பு நிகழ்வுகள் நடைபெறுவதுண்டு.

மலையும் மலை சார்ந்த காடுகளையும் பாதுகாக்க வேண்டியதற்கான முக்கியத்துவத்தை உலக மக்களுக்கு உணர்த்துவதற்காகவே, இவ்வாறான சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. எனவே, மலையும் மலைசார்ந்த காடுகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மையும் சாரும் என்பதை உணர்ந்து பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வோமாக.

**விஸ்வபிரம்மன்**




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஜனவரி மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 02, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org